உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ நாதம்-3



## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

53வது பட்டமளிப்பு விழா மலர்

விஜய வருடம் ஐப்பசி மாதம் 2ம் நாள் (19.10.2013)


ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
தங்கப் பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் அசல் 22 கரட் தங்க நகைகளைத்
தெரிவு செய்ய இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்.
கே.ரி. பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே : 021 321 2399

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ நாதம் - 3





## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
## 53வது பட்டமளிப்பு விழா மலர்
## 19.10.2013



சைவப்புலவர், சைவசித்தாந்தபண்டிதர்
க.நித்தியதசீதரன் M.A
இந்துதர்மாசிரியர்

உ
ஓம் நமசிவாய

# 2013ம் ஆண்டு விழாக்குழு

தலைவர் : சைவப்புலவர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை

செயலாளர் : சைவப்புலவர் திரு. செ. கந்தசத்தியதாசன்


பொருளாளர் : சைவப்புலவர் சி. நந்தகுமார்

செயற்குழு உறுப்பினர்


1. சைவப்புலவர் சு. செல்லத்துரை – கொழும்பு (தேர்வுச் செயலர்)
2. சைவப்புலவர் க. நித்தியதசீதரன் – சைவப்பிரசார செயலாளர்
3. சைவப்புலவர் சி. ரமணராஜா – உறுப்பினர்
4. சைவப்புலவர் ம. சிவலிங்கம் – உறுப்பினர்
5. சைவப்புலவர் ப. ருத்திராதேவி – உறுப்பினர்
6. சைவப்புலவர் சு. துஷ்யந் – மட்டக்களப்பு (உபசெயலர்)

---

## சைவநாதம் மலர்க்குழு



சைவப்புலவர்
செ. கந்தசத்தியதாசன்



சைவப்புலவர்
மு. திருஞானசம்பந்தபிள்ளை



சைவப்புலவர்
க. நித்தியதசீதரன்



உ
சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின்

# அருளுரை

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

சைவம் சிவசம்பந்தமுடையது. சைவசமயத்திற்கு இன்றியமையாத நூல்கள் 12 திருமுறைகளும் 14 மெய்கண்ட சாஸ்திரங்களும் ஆகும். சைவசமயத்தவர்கள் இந்நூல்களைக் கசடறக்கற்றுத் தெளிதல் வேண்டும். அப்போதுதான் சைவ வாழ்க்கை வாழலாம். சைவசித்தாந்தம் வாழ்வியல் ஆகும்.

சைவசமயம் அநாதியானது. அனேக மனித விழுமியங்களைச் சொல்வது. மனிதனை மனிதனாக மண்ணில் நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இவ்வுலக வாழ்க்கை அறநெறி வாழ்க்கையாக, சிவபக்தி வாழ்க்கையாக, வாழாவிட்டால் ஒருவர் முத்தியைப் பெற்றுவிட முடியாது.

சிவாலய வழிபாட்டை தினமும் செய்ய வேண்டும். இயலாதவர்கள் வாரத்தில் செவ்வாய், வெள்ளி தினங்களிலும் நைமித்திக, உற்சவ காலங்களிலும் சென்று வழிபாடு செய்தல் வேண்டும். இயன்றவரை தொண்டு செய்தல் வேண்டும்.

ஆலயங்கள் நைமித்திக காலங்களில் திருமுறைப்பஜனை நிகழ்த்தல், சைவச்சொற்பொழிவுகளை நிகழ்த்தல் போன்றவற்றைச் செய்தல் வேண்டும்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சைவமரபுநெறியில் சைவத்திருநூல்களைக் கற்கக்கூடிய வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தி தேர்வுகளை நடாத்தி சைவத்தில் புலமையாளர்களை உருவாக்கி ஆண்டுதோறும் சைவப்புலவர் பட்டம் வழங்கி வருகின்றார்கள். இத்தகு சைவப்புலவர்கள் ஆலயங்களில் சைவச்சொற்பொழிவுகளை நிகழ்த்தி சைவமரபைப் பேணி வருகின்றார்கள். இப்பணி இன்னமும் வளர வேண்டும். இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் ஊருக்கொரு சைவப்புலவராவது உருவாகவேண்டும் என வேண்டுகின்றேன்.

மேலும் சைவப்புவலவர் சங்கம் பொன்விழாவினைக் கண்டு இப்போது 53வது ஆண்டு பூர்த்தியடைகிறது. பொன்விழாவிலிருந்து வருடா

வருடம் பட்டமளிப்பு விழாவில் சைவநாதம் மலர் வெளியிட்டு வருகின்றனர். சைவசமய திருநூல்களின் கருத்துக்களை எளிதில் விளங்கக்கூடிய கட்டுரைகளையும் சைவப்புலவர்கள் விபரங்களையும் வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது. மேலும் 2011ம் ஆண்டு பல ஆண்டுகளாக கௌரவ செயலாளராக விளங்கிவரும் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் "சைவக்கல்விப்பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்" என்ற ஆய்வு நூலை வெளியிட்டார். உலகம் முழுவதிலும் இந்நூல் பரவி சைவப்புலவர்களின் அரை நூற்றாண்டுப் பணியைப் பறைசாற்றி நிற்கின்றது. இத்தகு சைவப்பணிகள் சிறப்படைய வேண்டும் என சிவனடி தொழுது ஆசி கூறுகின்றேன்.

மேலும் சமுதாயத்தில் சைவப்பணி ஆற்றி வரும் சான்றோர்களுக்கு அவர்களது சேவையைக் கௌரவித்துப் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வருகின்றனர். இத்தகு சைவப்பெரியார்களும் மண்ணில் நல்லவண்ணம் வாழ ஆசீர்வதிக்கின்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் சைவப்புலவர் சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்து எப்போதும் தன்னலன் கருதாது அரும்பணி ஆற்றி வருகின்ற அத்தனை பேரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல பரம்பொருளாம் பரமசிவனைப் போற்றிப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.


ஸ்வாமிகள்

### சிவத்தின் 5 முகங்கள்

| | |
|---|---|
| ஈசானம் | - உலகமெல்லாவற்றையும் ஆளுதல் செய்து அருள் செய்வது. |
| தற்புருஷம் | - தேவ சரீரம், மானுடசரீரம் முதலிய அந்தந்தச் சரீரங்களில் அதிஷ்டித்து நிற்பது. |
| அகோரம் | - கோரத்தன்மை நீங்கி சாந்தமாயிருப்பது. |
| வாமதேவம் | - அறம், பொருள், இன்பங்களை ஆன்மாக்களுக்கு கொடுக்கும் ஒளிமயமானது. |
| சத்தியோசாதம் | - உடம்மை உயிர்களுக்கு உடனே தோற்றுவிப்பது. |

தசாயுதம் 10

சூலம், மழு, வாள், வச்சிரம், அபயம், நாகம், பாசம், அங்குசம், கண்டாமணி, அக்கினி இவை இவனது சாங்கம் எனப்படும் அதாவது சிவனது அங்கத்தோடு கூடியது.



உ

ஓம் நமசிவாய

# தலைவரின் முன்னுரை


சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
தலைவர்.
153, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.


2013. 10. 13

*அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஐம்பத்துமூன்று வயதினை எய்துகின்றது. 2010ம் ஆண்டில் பொன்விழாவினை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்திலே திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரியார் திருமுன்னிலையில் வெகுசிறப்பாகக் கொண்டாடியது. அம்மாநாட்டிலே "சைவநாதம்" என்னும் மலரினை முதன்முதலாக வெளியிட்டது. கனதியான காத்திரமான அம்மலரில் சென்ற காலத்து சங்கப் பணிகளும் வரலாறும் கட்டுரைகளும் சங்க உறுப்பினர்களாகிய சைவப்புலவர்களின் விபரங்களும் உள்ளடக்கப்பட்டன.*

*பின்னர் 2012ம் ஆண்டில் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் பட்டமளிப்பு விழாவும் "சைவநாதம் – 2" மலர் வெளியிடப்பட்டது.*


*2013ம் ஆண்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும் சைவப்புலவர் பட்டமளிப்பு சைவமாநாடு விழாவின் போது "சைவநாதம் – 3" வெளிவருகின்றது.*

*2011ம் ஆண்டிலும் 2013ம் ஆண்டிலும் சித்தியடைந்தவர்களினது விபரங்களுடன் சில கட்டுரைகள் மற்றும் சங்க விடயங்களை உள்ளடக்கியதாக இம்மலர் வெளியிடப்படுகின்றது. சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் நிகழ்காலச் செயற்பாடுகளும் எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கப்படும் ஆவணமாகத் திகழும் இம்மலரினை அன்புடையோர், ஆர்வலர் யாவரும் பெற்றுச் சங்கப் பணிகளுக்கு ஊக்கம் அளிப்பீர்களாக.*

**மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் - 10**
தவம் செய்தல், சந்தோசம், சிவபக்தி, தானம் செய்தல், ஈஸ்வர பூசை, ஞானசாஸ்திரத்தைக் கேட்டல், இலச்சை, புத்தி, பஞ்சாட்சர ஜெபம் செய்தல், விரதங்களை அனுஷ்டித்தல்.

உ

சிவமயம்



# சைவசித்தாந்தாத்தை சைவர்களாகிய நாம் கற்க வேண்டும்

கௌரவ செயலாளர்,
அகில இலங்கை
சைவப்புலவர் சங்கம்.

சைவசித்தாந்த பண்டிதர்
சைவப்புலவர் **செ. கந்த சத்தியதாசன்**
M.A. in Saiva Sithantham

சைவசமயம் அனாதியனாது. மெய்மையானது. உயர்ந்த சைவசித்தாந்த தத்துவத்தைக் கொண்டது. உலகியல் வாழ்க்கையோடு ஒட்டியது. மனிதனை மனிதனாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுவது நான் மட்டும் வாழ வேண்டும் என நினைக்காது எல்லோரும் வாழ வேண்டும் என வழிகாட்டுவது. நாம் செய்த முன்வினை நற்பயன் காரணமாக இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய சைவசயத்தில் பிறந்திருக்கின்றோம். உலகியலில் வழ்வதற்கேற்ற, கல்விகளை, பல்வேறு மொழிகளையெல்லாம் கற்கின்றோம். ஆனால் நம்மைப் பிறக்கவைத்து நம்மை இயக்கிக் கொள்கின்ற மேலான சிவத்தைப் பற்றி, எம்முடலில் உள்ள ஆன்மாவைப் பற்றி, நாம் படுகின்ற இன்பங்களுக்கும், துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் காரணமான ஆணவம், கன்மம், மாயை பற்றி நாம் அறிய வேண்டுமல்லவா?

சைவசித்தாந்த சாஸ்திரம் என்பது திருக்கைலாய மலையில் சாதசிவனிடத்திலிருந்து உபதேச வழியாக ஞான பரம்பரையினர் தந்த எம்முதுசம் இப்பதினான்கு நூல்களும் தமிழில் அமைந்தது தமிழர்களுக்கு பெருங்கொடையாகும். தமிழர்கள் என்றால் அவர்கள் சமயத்தாலும் பண்பாடு கலாசாரங்களினாலும் சைவசமயத்தவர்கள் தான். இன்று அன்னிய மதத்தினரின் ஆதிக்கத்தாலும் மதமாற்றங்களாலும் தமிழர்களில் சிலர் தம் சொந்தப் பண்பாட்டு கலாசாரங்களை விட்டு அன்னியக் கலாசாரங்களுக்கு செல்கின்றனர். இவற்றை நாம் தடுத்து நிறுத்த வேண்டுமல்லவா?

அறியாமையை நீக்கி நம்சைவசமய அறிவை வளர்ப்பதற்கு இத்தகு ஞானநூல்களை நாம் கற்க வேண்டும். சைவசமயத்தவர்கள் எல்லாம் சைவசித்தாந்தம் கற்க வேண்டும். அப்போது தான் சைவவாழ்வை சிறப்பாக வாழ்ந்து கொள்ளலாம். மேலான சுத்தாத்துவித முத்தியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை திருநாட்டில் திருநெல்வேலி ஞானப்பிரகாசர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார். காசிவாசி செந்திநாதையர் என்று பலர் சைவசித்தாந்த நெறியை நம் தமிழர்கள் கற்றுக் கொள்வதற்கு வழிகாட்டினார்கள். இதே வழியில் தான் இன்று பல சைவப்புலவர்கள் இணைந்து அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினூடாக சைவசித்தாந்தக் கல்வியை வழங்கி, தேர்வுகள் நடாத்தி பட்டமளித்து வருகின்றார்கள்.

முற்காலத்தில் பெரியவர்கள் செய்தபணியினை இன்றைய சமுதாயம் பொறுப்பேற்று நடத்த முன்வரல வேண்டும். வரலாற்றில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் மட்டும் சைவசித்தாந்தத்தைப் படித்தோம். என்றில்லாது மூலைமுடுக்குகள் எல்லாம் சைவசித்தாந்தம் வளர சைவப்புவர்கள் உருவாக வேண்டும். தற்போது வடக்கிலிருந்து கிழக்கிலங்கையிலும் தலைநகர் கொழும்பிலும் சைவப்புலவர்கள் வளர்ந்து வருகின்றார்கள். இன்னமும் தமிழர்கள் வாழும் பிரதேசம் எங்கணும் சைவப்புவலர்கள் தோன்றி சைவசமயத்தின் சென்ற காலத்தின் பழுதிலாத்திறத்தை இனிவரும் காலத்திற்கு கொடுக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் சைவ சித்தாந்தத்தைப் போதிப்பதோடு 2009ம் ஆண்டு சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டக்கற்கை நெறி ஆரம்பித்து மூன்று அணியினர்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளார்கள். இன்னமும் தமிழர்கள் இணைந்து சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கை நெறியைப் படித்துப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

சைவசித்தாந்த செழும் புதையல்களைத் தேடித்தேடி ஆராய்ந்து கற்க வேண்டும். இவர்களுக்கெல்லாம் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வழிகாட்டியாக விளங்கும். ஞானதானம் வழங்கத் தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொய்கண்டர் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவும் நாள் எந்நாளோ..

| | | | |
|---|---|---|---|
| அன்னமயகோசம் | - சோறு | - சாக்கிராவத்தை | - நனவு |
| பிராணமயகோசம் | - ஒட்சிசன் | - சொர்ப்பனாவத்தை | - கனவு |
| மனோமயகோசம் | - மனம் | - சுழுத்தியவத்தை | - உறக்கம் |
| விஞ்ஞானமயகோசம் | - பேரறிவு | - துரியாவத்தை | - பேருறக்கம் |
| ஆனந்தமயகோசம் | - சந்தோஷம் | - துரியாதீதாவத்தை | - உயிர்ப்படங்கல் |

உ
சிவமயம்

# இறையனாரின் திருமுகப்பாசுரம்

தேர்வுச் செயலாளர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
ஓய்வுபெற்ற அதிபர்

கலாபூசணம்
சைவப்புலவர்
சு. செல்லத்துரை

எங்கள் தமிழ்மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்றாகப் போற்றப்படும் சிறப்பிற்குரியதாகத் திகழ்கின்றது. இதற்குக் காரணம் தமிழில் உள்ள இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வளங்களேயாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை காலத்தால் அழியாத இலக்கண, இலக்கிய, சமய நூல்கள் எண்ணில்லாதன எழுந்துள்ளன.

பழந்தமிழ் நூல்கள் பிற்காலத்து ஆக்கங்களுக்கு ஊற்றுக் கண்ணாக இருக்கின்றன. ஒரு விளைநிலம் எப்படி எக்காலத்துக்கும் விளைவு தந்து கொண்டிருக்கின்றதோ அப்படியே பழந்தமிழ் இலக்கியங்களும் பிற்கால வளங்களுக்கு விளைநிலங்களாகத் திகழ்கின்றன எனலாம். பழந்தமிழ்ப் புலவர்கள் "புலமையுடையோர் புலவர்கள் எனப்படுவர்." ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களாக இருந்திருக்கின்றார்கள். நாடாளும் மன்னர்கள் பலர் புலவர்களாக இருந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே சங்கப்புலவராக இறையனார் எனும் பெயருடன் இலக்கியம் படைத்த வரலாறும் உண்டு.

இங்கு நாம் இறையனார் படைத்த இலக்கியப்பாடல் ஒன்றை நயக்கலாம். இது திருமுகப் பாசுரம் என வழங்கப்படுகிறது. திருமுகம் என்றால் கடிதம். அது தபால், அஞ்சல், முடங்கல், ஓலை எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு தேவைகருதி இன்னொருவருக்கு எழுதப்படுவது திருமுகம் என இலக்கியங்களில் சொல்லப்படுகிறது.

இங்கு மதுரை சோமசுந்தரப்பெருமான் சேரமன்னன் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகம் ஒன்றுளது. அது தினமும் யாழ் வாசித்துப் பண்ணிசை பாடி தன்னைத் தொழும் பக்தனாகிய பாணபத்திரன் என்னும் இசை வல்லோனுக்காக எழுதப்பட்டது. அவனது வறுமையைப் போக்குவதற்கு பொருள் கொடுத்தனுப்புமாறு கேட்டு எழுதிய திருமுகப் பாசுரம் இது.

இந்தத் திருமுகம் இலக்கியச் செழுமை மிக்கது. ஒரு திருமுகத்தை எழுதும்போது எழுதுபவர் ஆகிய தான் யார்? தன் தகைமை என்ன?

யாருக்கு எழுதப்படுகிறது? அவருடைய தகமை என்ன? எதற்காக எழுதப்படுகிறது? எழுதப்படும் நோக்கத்தின் முக்கியத்துவம் என்ன? என்பதையெல்லாம் இலக்கியச்சுவை ததும்ப, அதைப் படிக்கத் தொடங்கியவர் தொடர்ந்து சுவைத்துப் படித்து எழுதியவரின் விருப்பத்தை நிறைவு செய்யக்கூடிய மனஎழுச்சியை உண்டாக்கும் விதத்தில் எழுதப்பட வேண்டும் என்பதற்கு இது எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இதோ திருமுகம் எழுதுபவர் முதலில் தன்னை அறிமுகம் செய்கிறார்.

மதிமலி புரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பால் நிற வரிச்சிறகு
அன்னம்பயில் பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன் யான் மொழி தருமாற்றம்

ஆகாயவீதியில் வலம் வரும் சந்திரனை, முட்டக்கூடிய உயர்ந்த மாடமாளிகைகள் விளங்கும் கூடல் எனப்படும் மதுரைமாநகரின் மாடங்களில் பால்போன்ற வெள்ளைச் சிறகுகளையுடைய அழகிய அன்னப் பட்சிகள் இதுவல்லவோ நடையழகு என்று வியக்கும் வண்ணம் அன்ன நடை பயில்கின்ற திருவாலவாயில் ஆலவாய் என்று சொல்லப்படுகின்ற சிவாலயத்தில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானாகிய நான் எழுதும் செய்தி என்று தொடங்கித் தொடர்ந்து யாருக்கு எழுதுகின்றேன் என்பதை

பருவக் கொண்மூப்படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிப்புரை குலவிய குடைக்கீழ்
செருமா உகைக்கும் சேரலன் காண்க!

என விழிக்கின்றார். மழைக்காலம். முகிலானது மண்செழிக்க காலம் அறிந்து மழையைப் பொழிவது போல புலவர்களுக்கு அவர் வறுமை நீங்கும் வண்ணம் உரிய செல்வத்தை உரிமையுடன் வழங்கி அவர்கள் முகம் மலர்வதைக் காண்டு ஈந்துவக்கும் இன்பத்துடன் தானும் முகம் மலர்ந்து நீதி தவறா வெண்கொற்றக் குடையின் கீழ் வீற்றிருந்து பகையை விரட்டும் வீரம் மிக்க சேரமன்னனே நீ காண்பாயாக என விளித்துத் தான் என்னால் கேட்கப்போகும் உதவியை வழங்குவதற்கு முற்றிலும் தகுதியுடையவன் என்பதைச் சொல்லாமல் சொல்லி அதன் மேலே தான் எழுதும் நோக்கத்தை எழுதுகின்றார்.

*பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்*
*தன்போல் என்பால் அன்பன் தன்பால்*
*காண்பது கருதிப் போந்தனன்*
*மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே*

*யாழ் இசைப்பதற்குரிய அத்தனை பண்பும், நிறைந்த உத்தம கலைஞனாகிய பாணபத்திரன் என்பவன் இந்தத் திருமுகத்தை உன் சமூகத்திற்கு கொண்டு வருகின்றான். இவன் நீ என்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றாயோ அத்தனை அன்பை என்மேல் வைத்துள்ளான். உன்போல் என்பால் அன்பன். இவன் உன்னைக் காண்பதற்காக வருகின்றான். இவனுக்குத் தேவையான பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைப்பாய். "மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பாய்" எனத் திருமுகத்தை முடிக்கின்றார்.*

*திருவாலவாய் இறையனார் எழுதிய இத்திருமுகத்துக்கு இணையான திருமுகத்தை வேறெங்குமே காணல் அரிது. ஒரு திருமுகத்தை எப்படி எழுதவேண்டும் என்ற பாடத்தை எமக்குப் பண்பாக உணர்த்தும் பாங்கு நயக்கத்தக்கதல்லவா?.*

*சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பதினொராம் திருமுறையின் முகமாக முதற்பாடலாக அமைந்திருக்கும் இத் திருமுகப் பாசுரம் சைவ இலக்கியங்கள் தமிழுக்கு வளம் சேர்க்கும் திறனுக்கு ஓர் உரைகல் எனலாம்.*

### புறப்பூதங்களின் விளக்கம்

| | புறப்பூதம் | குணம் | வடிவம் | நிறம் | பீசாக்கரம் | குறி | அதிதெய்வம் |
|---|---|---|---|---|---|---|---|
| நிலம் | பிருதுவி | கடினம் | நாற்கோணம் | பொன் | ல | வச்சிரம் | பிரமா |
| நீர் | அப்பு | குளிர்தல் | இருகோணம் | வெள்ளி | வ | தாமரைப்பூ | விஷ்ணு |
| தீ | தேயு | சுடுதல் | முக்கோணம் | சிவப்பு | ர | சுவஸ்திகம் | உருத்திரன் |
| காற்று | வாயு | சலித்தல் | அறுகோணம் | கறுப்பு | ய | அறுபுள்ளி | மகேஸ்வரன் |
| வெளி | ஆகாயம் | பெருவெளி | வட்டம் | புகைமை | ஹ | அமிர்தவிந்து | சதாசிவன் |

### ஒலி வடிவம்

| | | | |
|---|---|---|---|
| வைகரி வாக்கு | - அகர வடிவம் | - | அயன் - பிரமா |
| மத்திமை வாக்கு | - உகர வடிவம் | - | அரி - விஷ்ணு |
| பைசந்தி வாக்கு | - மகர வடிவம் | - | அரன் - உருத்திரன் |
| சூக்குமை வாக்கு | - விந்து வடிவம் | - | ஈசர் - மகேஸ்வரன் |
| அதிசூக்குமை வாக்கு | - நாத வடிவம் | - | சதாசிவம் - சதாசிவன் |

உ
சிவமயம்

# ஆர் அளக்க வல்லார்?

ச. விநாயகமூர்த்தி
வருகை விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

நாம் சைவப்பெருமக்கள் "சைவம் சிவத்துடன் சம்பந்தமானது" என்பார் திருமூலநாயனார். எனவே நாம் சிவசம்பந்திகள் நமக்குரிய பிரமாணநூல்கள் எவை? வடமொழியில் நமக்குரிய வேதசிவாகமங்களும் நம்மொழியில் திருமுறைகளும் அவற்றின் சாரமாக எழுந்த மெய்கண்ட சாத்திரங்களும் இவற்றுக்கு முரண்படாத அருளாளர் வாக்குகளுமே அவை. நமது பிரமாணத் திருநூல்களை தோத்திர, சரித்திர, சாத்திர நூல்கள் என ஒருவகையில் வகுக்கலாம். தோத்திரங்களும் சரித்திரங்களுமாக அமைந்த திருநூல்களின் பிழிவாக இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பும் வகையில் அமைந்துள்ளவையே சாத்திர நூல்கள் என ஒருவகையில் வகுக்கலாம்.

நமது பிரமாண நூல்களை மிகுந்த பக்தியோடு பவித்திரமாக அணுக வேண்டும் அவற்றை வெறும் இலக்கிய விமர்சன நோக்கோடு பார்ப்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இவ்வகையில் பன்னிரண்டாந் திருமுறையாக விளங்கும் பெரியு புராணம் சைவர்களாகிய நமக்கு அடியார்களைக் காட்டும் கண்ணாடியான அற்புதமான புராணமாகவும் தலைசிறந்த தோத்திரத் திருநூலாகவும் சாத்திர நூல்களுக்கு மிகச் சிறந்த ஆதாரத் திருநூலாகவும் விளங்குகிறது.

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடும் சேக்கிழார் பெருமானது ஆராமையின் ஆற்றாமையே நாம் பெரியபுராணத்தில் காண்கின்றோம். அடியார் பெருமக்களது இன்பதுன்பங்களைக் குறிப்பிடும் போது தாமும் அவற்றில் ஒன்றி பலநூற்றாண்டுகளின் பின் பயிலும் நம்மையும் அவற்றுள் அமிழ்த்திவிடும் அற்புத சக்தி அவர் திருவாக்கிற்குண்டு. பலவேறு சமுதாயச் சூழல்களில் பலவேறு நிலைகளில் வாழ்ந்த அடியார் பெருமக்களைப் பற்றிச் சொல்லும் போது அவர்களது நெறிமுறைகளையும் சிறப்பியல்புகளையும் தத்ரூபமாகச் சித்திரிப்பார். அந்தண குலத்துச் சம்பந்தப்பிரானின் உபநயனச் சிறப்பை விரிவாக

எடுத்துரைப்பது போல் வேட்டுவ குலத்திண்ணனார் வில் பிடிக்கும் சடங்கையும் சுட்டிக்காட்டுவார். மெய்பொருளார், ஏனாதிநாதர் போன்றோரது தொண்டின் சிறப்பை எடுத்துக்காட்டும் இடங்களில் தம்மையும் மீறித் தவிக்கிறார். பதைபதைக்கிறார். "தொண்டர் குலமே தொழப்படும் குலம்" என்பதற்கு எடுத்துக்காட்டாகவே பெரியபுராணத்தைக் காட்டுகிறார்.

தேவாரங்கள் எழுந்த சந்தர்ப்பங்களைச் சொல்லவரும் இடங்களில் அவற்றின் சந்தங்கள், சொற்றொடர்கள் அவை அமைந்த யாப்புக்கள் ஆகியவற்றையே தாமுங் கையாண்டு பாடுவார். இன்றும் அத்தேவாரங்களை ஓதுகின்ற உணர்வை அவருடைய வாக்குகள் தருகின்றன. பல இடங்களில் தேவாரங்களின் விளக்கங்களாகவும் விரிவாகவும் அவருடைய வாக்குகள் அமையும்.

பெரியபுராணம் எழுந்து பலநூற்றாண்டுகள் கழிந்து விட்டன. அதனை இன்று படிப்பவர்களுடைய அறிவு பக்குவம் போன்றவற்றுக்கு ஏற்ப ஐயங்கள், விபரீத விளக்கங்கள் போன்றவை ஏற்படும். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு பல இடங்களில் காரணங்கள் சமாதானங்கள் அமைதிகள் கூறுவார். அடியார் பெருமக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையவரே அவர்களது தொண்டின் சிறப்பை ஒப்பிட்டு ஒருவரை உயர்த்தியும் இன்னொருவரைத் தாழ்த்தியும் நினைப்பது அபச்சாரம். திருவருளின் போக்குக்கு முரண். அப்பர் பெருமானும் சம்பந்தப் பிரானும் திருமறைக் காட்டுத் திருக் கதவும் திறக்கவும் அடைக்கவும் முறையே பாடியருளியமை திருவீழிமிழலையில் அவர்கள் இருவரும் படிக்காசு பெற்றமை, ஆகிய இரண்டு அற்புதங்களையும் குறிப்பிடும் போது அவர் தரும் விளக்கம் அவரது திருவுள்ளத்தையே பிரதிபலிக்கிறது. அடியார் பெருமக்களது தொண்டின் பெருமையை சிவனே உள்ளவாறு அறிந்தவன் அயலறியாத எண்ணம் அடிமைத்திறத்தில் திளைத்த அவர்களை உலகுக்குக் காட்ட வேண்டுமென்பது திருவருளின் குறிப்பு. அதனால் இவ்வுலகம் உய்தி பெற வேண்டுமென்பதும் இறைவன் திருவுள்ளமே. எனவே நான் எனது அற்ப அறிவு கொண்டு பேசவில்லை. என்னைப் பேசும்படி எனது ஆசைதான் துரத்துகிறது.

"அளவுகூட உரைப்பரிதாயினும் அளவில் ஆசை துரப்ப
அறைகுவேன்."

"யார்க்கும் முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உள்ளதோ?"

"நம்மாற் புகலலாந்த கைமையதோ?"

"இந்த நிலைமை அறிந்தார் ஆர்?"

"திருஞானசம்பந்தர் பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

"பேருலகில் ஒரு நாவுக்குரை செய்ய ஒண்ணுமை உணராதேன்"

"திருத் தொண்டத் தொகை முன்னளித்த திருவாளன் வாசமலர்மென் கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவாம்."

என்பனவாதி திருவாக்குகள். சேக்கிழாரடிகள் அடியாரை அணுகும் முறையையும் அவ்வாறே நாமும் அணுகவேண்டும் என்ற அவரது திருவுள்ளக் கிடக்கையையும் நமக்குத் தெளிவுற எடுத்துக் காட்டுகின்றன. எறிபத்தரும் புகழ்ச்சோழ மன்னரும் செய்த செயற்கரிய செயல்களைச் சுட்டிக் காட்டி அச்செயல்களின் அருமைப்பாட்டை நம்மால் கணித்து விட முடியாதென்கிறார். ஒருவர் அடியார் ஒருவரின் பூக்கூடையைப் பறித்துச் சிந்திய பட்டத்துயானையையே வெட்டிச் சாய்த்து விடுகிறார். அவ்வளவில் அமையாது அதனைத் தடுக்காத குற்றத்துக்காக அரச அலுவலர் ஐவரையும் கொன்று நிற்கின்றார். புகழ்ச்சோழ மன்னனோ தன்னையுங் கொல்ல வேண்டுமென வேண்டுகிறான். வாளைக் கொடுக்கிறான். வாங்க மறுத்தால் தற்கொலை செய்துவிடுவான் என எண்ணி எறிபத்தர் அதனை வாங்கித் தன் கழுத்தையே அரியத் தொடங்குகிறார். மன்னர் பிடிக்கிறார் திருவருள் வானொலியாக வெளிப் படுகிறது. யானையும் எழுகிறது அலுவலர் ஐவரும் உய்ந்தெழுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக சிவகாமியாண்டாரின் பூக்கூடையும் நிறைந்து விடுகிறது. சேக்கிழார் அரியதொரு திருப்பாடலை வினாவொன்றுடன் நிறைவு செய்கிறார்.

"ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமைதானும்
நாளும் மற்றவர்க்கு நல்கும் நம்பர் தாம் அளக்கிலன்றி
நீளுமித் தொண்டின் நீர்மை நினைப்பில் ஆர் அளக்கவல்லார்"

ஆம்! அளக்க வல்லவர் யார்? இறைவனே அளக்க வல்லவன் தொண்டர் சீர் பரவும் சேக்கிழாரடிகளையும் ஆர் அளக்க வல்லார்?

உ
சிவமயம்

# "தம்முதல் குருவுமாய்........"

சைவப்புலவர்
மு. திருஞானசம்பந்தபிள்ளை

"குரு" என்றால் பாசத்தை நீக்குபவர் அல்லது அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றுபவர் என்பது பொருள்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று வரிசைப்படுத்திப் போற்றி வணங்கச் சொல்வர் நம் முன்னோர். எமக்கு அறிவையூட்டுபவர்களாக மாதா, பிதா, ஆசிரியர் முறையே விளங்குகின்றனர். இவர்கள் உலகியல் நெறியை தெரிவித்து வையத்துள் வாழ்வாங்கு வாழவைப்போராவர். இவற்றுக்கு மேலாகச் சமயதீட்சை அளிப்பவரும் குரு எனப்படுகின்றார். சைவசமயந்தழைத்தோங்கத் தேவார திருவாசகங்களையும், மெய்கண்ட சாத்திரங்களையும் தந்த அருளாளர்கள் முறையே சமய குரவர்கள், சந்தான குரவர்கள் எனப் போற்றி வணங்கப்படுகின்றனர்.

மேற் கூறப்பட்ட அனைவரும் எமது ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டியாக விளங்குபவர்களே

சைவசமயம் ஆன்மாக்களை மலஞ்சார் நிலையில் மூவகைப் படுத்துகின்றது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுடைய வர்களைச் சகலர் என்றும் ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்களால் கட்டுப்பட்டவர்களைப் பிரளயாகலர் என்றும் ஆணவம் என்னும் ஒரு மலமுடையாரை விஞ்ஞானகலர் என்றும் வகுத்துள்ளது.

**"திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றார்களன்றி**
**ஒரு மலத்தாராயும் உளர்"** (திருவருட்பயன்)

இம் மூன்று திறத்தினரும் ஆணவமெனும் மும்மலத்தால் பீடிக்கப் பட்டவர்களே. மூலமலம் ஆகிய ஆணவத்தை "அஞ்ஞானம்" என்றும் "அறியாமை" என்றும் கூறுவர். அறியாமைக்கு எதிர் **"அறிவு"** அஞ்ஞானத்திற்கு எதிர் **"மெஞ்ஞானம்"**

ஆன்மாக்களாகிய நாம் அறிவுடையோம் ஆயினும் எம் அறிவு சிற்றறிவே, ஏகதேச அறிவே என்பர் மெய் உணந்தோர். நாம் அனைவரும் உணர்த்த உணரும் தன்மையுடையவர்கள். எமக்கு உணர்த்துகின்ற குருவும் அவ்வவர் மட்டில் அறிவில் உயர்ந்தவர்களே.

இந்நிலையில் முற்றும் உணர்ந்து உணர்த்தக் கூடியவர் யாவர்? என்று ஆராய்ந்து பார்க்கின், "அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல் அறிவே மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்று மாணிக்கவாசகப் பெருமானால் சுட்டப்பட்ட சிவனே உண்மையில் குரு ஆகின்றமை புலப்படும்.

மெய்யில்லா நெறிதன்னை நெறியாக நினைந்து சிறுநெறி ஒழுகும் ஆன்மாக்களைப் பெருநெறியாகும் திரு நெறியில் சேர்ப்பதாகவே படி முறையாக சோபான முறையில் சீலம், நோன்பு, செறிவு, அறிவு – சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளை, மார்க்கங்களைச் சைவ நெறி எடுத்துக்காட்டியுள்ளது.

இவற்றைத்தான் சைவசித்தாந்தம் தவம் என்று குறிப்பிடுகின்றது செந்நாப்புலவர் திருவள்ளுவ நாயனாரும் "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்?" என்று குறித்தமை சிந்திக்கத்தக்கது.

மெய்கண்டசாத்திரங்களுள் மணிமுடியாக விளங்கும் சிவஞான போதம் "தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்று எட்டாஞ் சூத்திரத்துள் எடுத்துக்காட்டுகின்றது.

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து "ஐயா நீ ஆட் கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம் எய்யாமறகாப்பாய்" என்று அன்பு மீதூரக் கைதான் நெகிழ விடாது சிக்கெனக் பிடித்து ஆழும் ஆன்மாவை ஆட்கொள்ளுவதற்காக இதுவரை காலமும் ஒன்றாக வேறாய் உடனாய் உயிர்க்குயிராய் கலந்து நின்ற சிவனே ஆன்மாக்களுடைய மலபரிபாகத்திற்கேற்ப திருவருளாகிய சத்தி நிபாதத்தை வெளிப்படுத்தும் வகையில் சகலருக்கும் அவர் போலும் அருள் திருமேனி கொண்டும் பிரளயாகலருக்கு முன்னிலையாகத் தன் திருமேனியுடனும் விஞ்ஞானாகலருக்கு அறிவே வடிவாகவும் மெய்ஞ்ஞானத்தை அருளுகின்றார்.

மெய்யுணர்த்தும் முதலாகிய ஞானாசிரியன் விழுமிய முழுமுதல்வனே ஆவான். ஏனைய கல்விகளை – கலைஞானங்களை உணர்த்தும் குரவர் மாட்டும் முழுமுதல்வன் கலப்பால் ஒன்றாம் தன்மையில் விளங்குவான். ஞானாசிரியன் மாட்டுப் பொருள் தன்மையால் வேறாய்ச் சிறந்துவிளங்குவன். இதற்கு ஒப்பு தயிரில் விளங்கும் நெய்யாகும். தயிரின்கண் தயிர்மோர் உள்ளடக்க நெய் மேலோங்கிப் பிரிப்பின்றிப் பரந்திருக்கின்றது. நெய்யினை இஞ்ஞான்று நாம் வெண்ணெய் என்கிறோம்.

இத்தகுதியுடையார் முழுமுதல்வனை அவனருளால் உயிருணர்வில் ஒழிவின்றி உணரும் ஒள்ளிய தன்மையுடையார். இவர்கள் பால் சிவன் விளங்கித் தோன்றும் நிலை இவர்ந்தூரும் நிலையாகும். இதனையே ஆவேச பக்கம் என்பர். ஆவேச பக்கம் எனினும் சிறப்பு அதிட்டானம் எனினும் ஒன்றே. இவ்வுயிரினை மாசிலாவுயிர் என்பர். எனவே மாசிலாமணி என ஞானாசிரியனை அழைத்தல் மிகவும் பொருத்தமாகும்.

ஏனைய கலைவல்லார் நூலுணர்வேயன்றி நுண்ணுணர்வு பெறாமையால் அவர் மாட்டு முழுமுதல்வன் கலப்பால் ஒன்றாய் நின்று இயைந்து இயக்குவன். இந்நிலையினைப் பொதுவான அதிட்டானம் என்பர்.

இந்நிலை பாலில் நெய் போல் நிற்கும் நிலை. கொள்ளும் பொருளால் கொள்கலத்துக்கு உயர்வு உண்டாதல் போல இருக்கும் பொருளால் இருக்கைக்கு உயர்வு உண்டாம்.

முழுமுதல்வன் "மாயை உருவினை ஏயான்" என்பது மெய்மையே. அவன் திருவுருக்கொள்வது தன்னின் வேறல்லாத திருவருளினன்றி மருளாகிய மாயையினன்று.

உலகமே உருவாக இருக்கின்றான் என்பது கண் கால் கை போன்ற உறுப்புக்களோடு அன்று. அனைத்தும் திருவருள் திருமேனியே.

முழுமுதல்வன் ஞானாசிரியன் மாட்டு இவர்ந்தூர்வது மாயாவுடம்பி னன்று. அவ்வாசிரியன் ஆன்மாவின் கண்ணேயாம் "நாயகன் காயமோ மாயை அன்று காண்பது சத்தி தன்னால்" என்ற சிவஞானசித்தியார் பாடல் உளங் கொள்ளத்தக்கது.

மேலே குறிப்பிட்டவாறு ஒரு மலத்தாராகிய விஞ்ஞானாகலருக்கு அவரை உய்யக் கொள்ளுங்கால் அறிவிற்கறிவாய் உள் நின்றவாறே மெய்யுணர்த்தி ஞானாசிரியனாகிய சிவன் வீடுபேற்றையருளுவான். அவ்வுரு உணர்வில் தோன்றும் அறிவுருவாம் உள்ளிருந்துணர்த்துவதால் இது தன்மையிடமாம்.

இரு மலத்தாராகிய பிரளயாகலருக்கு உணர்த்துவது முன்னிலையாம் இவ்வுரு அருள் உருவாகும். "நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் ஆகிய உறுப்புடன் முத்தொழில் நடாத்தி நின்ற தனதியற்கை வடிவே குரு வடிவாகக் காட்டி முன்னின்று செவியறிவுறு முகத்தான் உணர்த்துதல்" என்பர் சிவஞானபோத உரையாசிரியராகிய மாதவச் சிவஞான முனிவர்.

இது பேரொளியினைக் காண ஆற்றல் இல்லாத கண் அப்பேராளியினை அடக்கிக்காட்டும் கருவி மூலம் காண்பது போல்வது சூரிய ஒளியைக்கண்ணாடி மூலம் காண்பதெனலாம். அது போலவே பேரறிவும் பேரருளும் உடைய இறைவன் அவ்வருள் உருவினை ஞானாசாரியன் பால் அடக்கி நம்மை ஆண்டருளுகின்றான் என்பதே உண்மை.

திருமுருககாற்றுப்படையில் நக்கீரர் முதற்கண் "உலகம் உவப்பவலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" என உவமித்த முருகனை இறுதியில் "மலை கிழவோனே" என்று நாம் கண்ணால் காணத்தக்க உருவில் காட்டும் நயம் சிந்தனைக்குரியது.

இறைவனே பக்குவான்மாக்களை ஆட்கொள்ளுவதற்கு ஞானாசிரியாராக எழுந்தருகின்றான் என்பதற்குச் சைவசித்தாந்த சாத்திரங்கள் சான்று பகர்கின்றன திடமாகத் தெரிவிக்கின்றன. என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் உணர்ந்து கொள்வோமாக.

அறியாமையுள் நின்றளித்ததே காணுங்
குறியாக நீங்காத கோ. (திருவருட்பயன் அதி 5–1)

பார்வையென மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வை யெனக் காணார் புவி (திருவருட்பயன் அதி 5–5)

ஆரறிவா ரெல்லாமகன்ற நெறியளுரும்
பேரறிவான் வாராத பின் (திருவருட்பயன் அதி 5–9)

துன்னியவைம்புல வேடர் சூழலிற்பட்டுத்
துணை வனையுமறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னு மருட் குருவாகி வந்தவரினீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பான்
(சிவஞானசித்தியார் சூ–8)

சிவனெனவே தேறினன் யானென்றமையாலின்றுஞ்
சிவனவனி வந்த படி செப்பில் – அவனிதனில்
உப் பெனவே கூர்மையுருச் செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாயவன் (திருக்களிற்றுப்படியார் –91)

அகளமாய் ஆரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்த தென்றுந் தீபற
தானாகத் தந்த தென்றுந் தீபற (திருவுந்தியார் – 1)

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்த விட்டு
அன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே
(சிவஞான போதம் சூ.8)

**மனித வாழ்க்கையில் விலக்க வேண்டிய இயமங்கள் 10**

உயிர்களைக் கொல்லாமை, பிறர் பொருளைக் களவொடுக்காமை, பிறர் மனைவியரை விரும்பாமை, பொய்பேசாமை, பொறாமை கொள்ளாமை, எல்லா உயிர்களிலும் இரங்காமை, வஞ்சனையில்லாமை, மனங்கலங்காமை, கசியுடமை.

ஓம் நமசிவாய

# சிவஞானபோதம், சிவஞானசித்தியார் நோக்கில் சைவசித்தாந்த பசு உண்மை

கௌரவ செயலாளர்
அகில இலங்கை,
சைவப்புலவர் சங்கம்.

சைவசித்தாந்த பண்டிதர்
சைவப்புலவர் **செ. கந்த சத்தியதாசன்**
M.A. in Saiva Sithantham

சைவ சித்தாந்தம் என்பது முடிந்த முடிபு. அதாவது உலகிலேயே உயர்ந்த உண்மைப் பொருள்களின் உண்மை நிலையைத் தர்க்கரீதியாக எடுத்தியம்புவது சைவசித்தாந்தம் ஆகும். திருக்கைலாயமலையில் கல்லாலின் நிழலிலிருந்து சதாசிவமூர்த்தியின் உபதேச ஞானபரம்பரையின் உண்மை ஞானமே சைவசித்தாந்த சாஸ்திர நூல்களாக எழுத்துருவம் பெற்றதாகும்.

இத்தகு சைவசித்தாந்தம் நவீன விஞ்ஞானத்திற்கும் அப்பால் ஆழ ஊடுருவி ஆராய்ந்து பார்த்துக் கண்ணுக்குத் தெரியாத பதி, பசு, பாசங்களைப் பற்றி நன்கு எடுத்துக்கூறுவதோடு அதற்கு முன்னர் கூறிய தவறான தத்துவக் கருத்துக்களையும் தர்க்கமுறையில் மறுத்துக்கூறி முப்பொருள் உண்மையையும் இயல்புகளையும் நிலைநாட்டுகிறது. இவ்வரிய பெறுமதியுடைய சைவசித்தாந்த தத்துவத்தை, சைவசமயத்தை சைவம் என்று பெயரளவில் அழைத்தாலும் குப்பிளானூர் காசிவாசி செந்திநாதையர் சுத்தாத்துவித சைவசித்தாந்தம் என்றும் சுத்தாத்துவித சைவசித்தாந்தநெறி என்றும் காரணத்தோடு அழைக்க வேண்டும் என்பார்.

இவ்வரிய சைவசித்தாந்த தத்துவத்தைக் கொண்ட மெய்ச்சமயத்தில் பிறந்த நாம் சைவசித்தாந்த உண்மைகளைப் படித்துச் சுவைக்க வேண்டுமல்லவா. படித்து சைவசித்தாந்த வாழ்வு வாழவேண்டுமல்லவா. மதம் மாறுவோரைத் தடுக்க வேண்டுமல்லவா.

சைவசித்தாந்தத்தில் கூறப்படும் முப்பொருள் பதி, பசு, பாசம் என்பனவாகும். பதி என்பது தலைவனாகிய சிவத்தையும் பசு என்பது உயிர்களையும், பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் குறிக்கின்றது. பசு என்றால் மலங்களாற் பீடிக்கப்பட்டது. அதாவது பாசங்களால் பந்திக்கப்பட்டது என்பது பொருளாகும். இத்தகு பசு உண்மையை சிவஞானபோதம் மூன்றாம் சூத்திரம் பின்வருமாறு கூறுகிறது.

"உளதில தென்றலில் எனதுட லென்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா"

இதே கருத்தை சிவஞானசித்தியார் 3ம், 4ம் சூத்திரத்திலும் அருணந்தி சிவாசாரியார் 9 விருத்தப்பாக்களால் விரித்துரைக்கின்றார்.

"உயிரெனப்படுவது இந்த உடலின் வேறுளதாய் ஊற்றுச்
செயிருறும் இச்சாஞானச் செய்திகள் உடைய தாகிப்
பயில்வுறும் இன்பதுன்பப் பலங்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்சு அவத்தைப்படும் உண்மை துரியாதீதம்"

சி.சி 187

உயிர் எனும் பசு ஆனது இந்த உடம்பிற்கு வேறாயுள்ளது. உடல்களைப் பொருந்தி நின்று அதன் இச்சா, ஞானா, கிரியைகளால் புண்ணிய, பாவங்களைச் செய்கின்றது. அப்புண்ணிய பாவங்களின் பயனையும் அனுபவிக்கும். ஆராயுமிடத்து சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் (கனவு, நனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல்) முதலிய 5 அவத்தைகளைப் பொருந்தி இலாடத்தானத்திலிருந்து கீழ்நோக்கிச் சென்று மூலாதாரத்தை அடையும். இது கீழாலவத்தை எனப்படும். அதாவது அறியும் தன்மையைவிட்டுக் கீழ்நோக்கி துரியாதீதத்தில் சென்று நிற்கும் இந்த நிலை கேவல நிலையாகும்.

உடம்பினுள் அறியும்பொருள் ஒன்றுளது. அது உடம்பினின்றும் வேறுபட்டது. மெய், வாய், கண், மூக்கு, செவி போன்ற ஐம்பொறியுமில்லை. நாம் சுவாசிக்கும் போது உள் எடுக்கும் பிராணவாயுவும் (ஒட்சிசன்) இல்லை. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களுமில்லை. இவை எல்லாம் சேர்ந்ததுதான் பசுவோ என்றால் அதுவுமில்லை எனப் பாரிசேட அளவையைப் பயன்படுத்தி பசு உண்மை விளங்க வைக்கப்படுகிறது.

உயிர் உறங்குகின்ற வேளையிலும் உயிர் உடம்பை விட்டு இறந்து உடல் சவமாய்க் கிடக்கும் போதும் அறிவு நிகழ்வதில்லை. எனவே உடம்பை விட வேறாக அறியும் உயிர் ஒன்று உளது என்றும் **"எனதுடல்"** எனும் சாதாரண சொற் பிரயோகத்தினாலும் உடம்பை விட உயிர் வேறாக

உள்ளது என்று தேகான்மவாதிகளின் வாதத்தை சைவசித்தாந்தம் மறுத்துக் கூறுகின்றது.

> உடலின் வேறு உயிர் ஏன் இந்த உடல் அன்றோ உணர்வது என்னில்
> உடல் சவமான போதும் உடலினுக்கு உணர்வு உண்டோ தான்
> உடலின் வாயுப் போனால் உணர்ச்சி இன்று உடலுக்கு என்னின்
> உடலின் வாயுப் போகாத உறக்கத்துக்கும் உணர்வது இன்றே.
>
> சி.சி 188

இந்திரிய ஆன்மவாதிகள் ஐம்பொறிகளும் அறியும் சக்தி உடையது என்கின்றார்கள். ஆனால் ஒருபொறி தன் விடயத்தையே அறியக் கூடியதாக உள்ளது. செவியானது சத்தத்தைக் கேட்குமேயன்றி பார்க்க முடியாது. வாய் பேசுமேயன்றி ஒருவருடைய பேச்சைக் கேட்க முடியாது உள்ளது. மேலும் உறங்குகின்ற காலத்தில் இப்பொறிகள் விடயங்களை அறிய முடியாதிருப்பதாலும் ஐம்பொறிகளே ஆன்மா எனக்கூறும் இந்திரிய ஆன்மவாதிகளின் கூற்று ஏற்க முடியாது. அதாவது இந்த ஐம்பொறிகளைக் கொண்டு அறியும் பொருளே ஆன்மாவாகும் எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

பிராணன் தான் ஆன்மா எனக் குறிப்பிடும் ஆன்மவாதிகள் கூற்றையும் சைவசித்தாந்தம் மறுக்கும். உறங்கும் காலத்தில் பிராணன் ஆகிய சுவாசம் நடைபெறுகின்றது. ஆனால் அவ்வேளை நடைபெறும் சம்பவங்களை இந்தப் பிராணன் அறிய முடியாதுள்ளது. எனவே பிராண வாயுவை உள்ளிழுத்து அடக்கி வைத்திருந்து வெளியே விடும் அதற்கு வேறாக ஆன்மா உள்ளது என்கிறார்.

தொடர்ந்து நான்காம் சூத்திரத்திலும் உயிர் என்பது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக் கரணங்கள் அல்ல என்கிறார். "அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று அவை சந்தித்தது ஆன்மா" என்பது சிவஞானபோதம்

மனம் அகங்காரத்தையும் அதன் தொழிலையும் அறியாது அகங்காரம் மனத்தையும் அதன் தொழில்களையும் அறியாது. இவ்வாறு அந்தக் காரணங்கள் ஒன்றை ஒன்று அறிய முடியாதவையாயும் ஒன்றின் தொழிலை மற்றையது அறிய முடியாமையாலும் அந்தக் கரணங்கள் ஆன்மா ஆகாது.

அந்தக் கரணங்கள் நான்கினையும் அறிந்து அவ்வவற்றின் செயற்பாடுகளையும் அறிவதோடு அவற்றின் வேறாய் உயிர் நிற்கின்றது எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.

ஒருபொருள் நமக்குத் தெரிய வேண்டுமானால் ஒரு ஒளிமுதல் அதாவது சூரியனோ, விளக்கோ, மின்குமிழோ எதுவானாலும் அதிலிருந்து ஒளி உருவாகி அப்பொருளில் பட்டு அவ்வொளிக்கதிர் எம் கண்ணை அடையும் போதே அப்பொருளை நாம் பார்க்க முடியும். அதேபோல் ஆன்மா விடயங்களை அறிவதற்கு ஆன்மாவோடு அந்தக்கரணங்கள் ஒன்றித்து நின்று அறிவதற்கு துணைக் கருவிகள் ஆகத் தொழிற்படுகின்றது. என்பதை உணர்ந்து தமது இயல்பை அறிந்தவர்கள் பசுஞானம் கைவரப் பெற்றவர்கள் ஆவார்கள். சிவஞானம் என்பது பசுஞானத்திற்கும் மேலானது ஆகும்.

கருவியாம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்
மருவி ஆன்மாவே என்னவரும் தீபம் எனத் தெரிந்து அங்கு
ஒருவி ஆன்மாவின் உண்மை உணர்ந்தவர் தமை உணர்ந்தோர்
தரும் இது பசுஞானம் பின் சிவஞானம் தனக்கு மேலாம்.

சி.சி. 192.

பசு ஞானமானது ஆன்ம சொரூபத்தை அறியும் அறிவாகும். சிவஞானம் என்பது பதிஞானம் அதாவது திருவருள் ஆகும்.

ஆன்மா எவ்வாறு அறிவைப் பெறுகின்றது என்றால் வைகரிவாக்கு அகரவடிவாயும், மத்திமை வாக்கு உகர வடிவாயும் பைசாந்தி வாக்கு மகரவடிவாயும், அதிசூக்குமை வாக்கு நாத வடிவாயும் இருக்கும். இவை யாவும் இணைந்து சமஷ்டிப் பிரணவமாகிய ஒலிவடிவாயும் இருக்கும்.

அதாவது இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்னும் சிவசக்திகள் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய பஞ்ச மூர்த்திகளையும் செலுத்த இப்பஞ்சமூர்த்திகளே முறையே அகரம், உகரம், முதலிய அக்கரங்களையும் செலுத்த இந்த அக்கரங்கள் அகங்காரம் முதலிய அந்தக்கரணங்களைச் செலுத்த ஆன்மா விடயங்களில் விருப்புடையதாய் அவற்றை இடைவிடாது சிந்தித்துப் பற்றி, நிச்சயித்து, அபிமானித்து நிற்கிறது.

"அகாரவுகாரம், அகங்காரம், புத்தி மகாரமனம்..." எனச் சிவஞானபோத வெண்பா குறிப்பிடுகின்றது. ஆனால் ஞானப்பிரகாசர், நிரம்ப அழகியதேசிகர் சிவாக்கிரகயோகிகள் போன்றோர் சிவஞான சித்தியார் உரையில் அகாரம் மனத்தையும் உகாரம் புத்தியையும் மகாரம் அகங்காரத்தையும் செலுத்தும் என்கின்றனர்.

கடலில் அலைகள் புதிது புதிதாய்த் தோன்றியும் பின் இல்லாமல் ஒடுங்கியும் வருவது போல ஆன்ம அறிவும் கணந்தோறும் நினைப்பும், மறப்புமாய்த் தோன்றியும், ஒடுங்கியும் வருவதாய் இருக்கும் எனவேதான் ஆன்மா சடப்பொருளாகிய அந்தக்கரணங்களுடன் கூடிய விடத்து விடயங்களை அறிகின்றது. இந்த நெறிமுறையானது இடைகலை, பிங்கலை நாடிகள் வழியாக உள்ளேயும் வெளியேயும் சுவாசிக்கும் வாயுவைத் தடுத்து நிறுத்தி சுழுமுனை நாடியிற் செலுத்தும் யோகப் பயிற்சி செய்பவர்களுக்கே நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

*அயன், அரி, அரனும் ஈசர் சதாசிவம் அதி தெய்வங்கள்*
*உயவரும் அவ்வோடு உவ்வும் அவ்விந்து நாதங்கட்குப்*
*பயனுறும் அஞ்சில் ஆன்மா பரவிடில் அசித்தாம் பார்க்கில்*
*சயம் உறு வளி இரண்டும் தவிர்த்துறின் தானும் தோன்றும்*

உடல், இந்தரியங்கள், பிராணவாயு, அந்தக் கரணங்கள் ஆகிய எல்லாம் சேர்த்தே ஆன்மா எனச் சமுதாயவாதிகளாகிய சௌத்திராந்திகளும் வைபாடியரும் கூறுவதைச் சைவ சித்தாந்தம் மறுக்கிறது. இவற்றுக்கு வேறாக ஆன்மா உள்ளது என நிலைநிறுத்துகின்றார். அதாவது மேற்கூறிய இவற்றில் ஒன்று இல்லாவிட்டாலும் அறிவு நிகழாது. எல்லாம் சேர்ந்தாலேயே அறிவு நிகழும். இப்பொருட்கள் வேறாயும், இப்பொருட்கள் ஒரு பொருளாகாமையாலும் இப்பொருட்களை அறியும் ஆன்மா வேறாயும் இருத்தலால் ஆன்மா என்பது பலபொருட் கூட்டம் ஆகாது. இவற்றைவிட ஆன்மா என்ற ஒன்று தனியாக உள்ளதை சைவசித்தாந்தம் தர்க்கரீதியாக நிறுவுகின்றது.

*ஆன்மாவின் வடிவுதானும் அநேகாரத்தக் கூட்டம் என்னின்*
*பார்ப்பார்கட்கு ஆன்மா இன்றாயப் பலபொருள் உண்மை ஆகும்.*
*சேர்ப்பாய பலவே உண்மை என்றிடில் சென்று இவற்றை*
*ஓர்ப்பான் வேறு உணர்வோர்க்கு எல்லாம் உணர்பொருள் தேறுதாமே.*

*சி.சி 195*

உ
சிவமயம்

# சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில் "சைவப்புரவலர்" எனும் கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவோர் விபரம்



## திருமிகு சி. வெற்றிவேலாயுதம்

**நிர்வாக இயக்குனர்,**
**வலம்புரிப் பத்திரிகை**

சிவஞானம் மீனாட்சி தம்பதிகளுக்கு 1951ம் ஆண்டு அவதரித்தார். இளமைக்கல்வியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார். தொடர்ந்து உயர் கல்வியை பொரளை சுக்குவினஸ் பல்கலைக்கழகத்தில் கற்று கணக்கியல் பட்டம் பெற்றார். கொழும்பில் பலநிறுவனங்களுக்கு நிதி, வருமான வரி, ஆலோசகராக கடமை ஆற்றினார். 1999ல் கார்த்திகை மாதம் யாழ்ப்பாணத்தில் திரு. த. திருமாலழகன், திரு. ந. விஜயசுந்தரம் ஆகியோருடன் இணைந்து வலம்புரி எனும் தினசரிப்பத்திரிகையை ஆரம்பித்து தமிழுக்கும் சைவத்திற்கும் பலதொண்டுகள் ஆற்றி வருகின்றார்.

சைவசமய வாழ்க்கை வாழ்ந்து வரும் இவர்கள் சி.செல்வராணியை கைத்தலம் பற்றி இல்வாழ்வு வாழ்ந்து வருகின்றார். இலங்கைத் திருக்கோயில்கள் மட்டுமன்றி இந்தியாவில் காசி, கேதாரம், பத்திரிநாத் போன்ற சிவத்தலங்களுக்கு யாத்திரை செய்து வருவதோடு வருடாவருடம் ஆனிஉத்தரன்று தில்லைச் சிற்றம்பலத்தில் நடேசப் பெருமான் அபிஷேகம், திருவுலாக் காட்சியையும் தரிசித்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களில் திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளார். எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும் உதவி வருகின்றார்கள்.

அனுசதாசிவர் 10 பேர் - பிரணவர், சதாக்கியர், தீர்த்தர், காரணர், சுசீலர், ஈசர், சூக்குமர், காலர், தேகேஸ்வரர், அங்சு.
அட்ட வித்தியேஸ்வரர் 8 பேர் - அநந்தர், சூக்குமார், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், சீகண்டர் (ஸ்ரீகண்டர்) சிகண்டி.



# இ. ச. பே. நாகரத்தினம்

**உரிமையாளர், இ. ச. பே. நாகரத்தினம் அன்.கோ,**
**கஜமுகன் ஹாட்வெயார், யாழ்ப்பாணம்.**

1956ம் ஆண்டு காரைநகர் வாரிவளவு பேரம்பலம் மாணிக்கம் தம்பதிகளுக்கு சிரேஷ்ட புத்திரனாக அவதரித்தார். இளமைக் கல்வியை யாழ்ற்றன் கனிஷ்ட பிரிவு கல்லூரியிலும் தொடர்ந்து யாழ்ப்பாணம் வண்ணை சைவ சன்மார்க்க வித்தியாசாலையிலும் கற்றுக் கொண்டார். தொடர்ந்து தந்தையின் வழியில் இ.ச. பேரம்பலம் சகநிறுவனத்தில் இணைந்து வியாபாரத்தை சிறப்பாக செய்து வந்தார். காரைநகர் தங்க மலரைத் திருமணம் செய்து 5 புத்திரர்களையும் பெற்று சைவசமய பாரம்பரியத்தில் வளர்த்து கல்வியினால் முன்னேற்றம் பெறச்செய்தார்.

தொடர்ந்து இ.ச.பே.நாகரத்தினம் அன்.கோ, கஜமுகன் ஹாட்வெயர் நிறுவனத்தை ஆரம்பித்து சிறப்புற நடாத்தி வருகின்றார். காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் திருப்பணி, ஆலய உற்சவங்கள் போன்றவற்றுக்கு பெரும்பங்காற்றி வருகின்றார். ஈழத்து சிதம்பரம் மாணிக்கவாசகர் மாடலயத்தின் அன்னதானப் பணியை பல்லாண்டுகளாக சிறப்பாக நடாத்தி வருவதோடு 2007 ஆண்டுமுதல் ஆயட்கால தலைவராகவும் விளங்கி வருகின்றார்.

இவற்றைவிட யாழ்குடா நாட்டில் பல ஆலயங்களின் திருப்பணிக்கு பங்காற்றி வருகின்றார். ஏழைச்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு மாதந்தோறும் பேருதவி செய்து வருகின்றார்கள். இத்தோடு பாடசாலைகள், பல்கலைக்கழகம், கல்வியல் கல்லூரி, சைவசமய நிறுவனங்கள் எனப் பலவற்றின் செயற்பாடுகளுக்கும் நிதியுதவி செய்து வருகின்றார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி இவரது சேவையைப் பாராட்டி **"கல்விக் காருண்யன்"** பட்டம் வழங்கியது. இலங்கை செஞ்சிலுவை சங்கம் **"மனிதநேய ஈகையாளான்"** எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. **"பொன் மலர்ச் செம்மல்"** எனும் பட்டத்தினை யாழ்ப்பாணம் சைவ சன்மார்க்க வித்தியாலயம் வழங்கியுள்ளது.

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவராகவும் 2012 – 2013ல் தலைவராகவும் இருந்து நற்பணியாற்றி வருவதோடு லயன் இ.ச.பே நாகரத்தினம் PMJF என நாமமும் சூட்டியுள்ளார்கள். எமது சங்கப்பணிகளுக்கும் உதவியாற்றி வருகின்றார்.

உ

சிவமயம்

# இறை பணி நிற்க

சைவப்புலவர்

க. நித்திய தசீதரன் *M.A.*

சைவசித்தாந்தக் கோட்பாட்டினை எடுத்துரைத்த நூல்களாக பதினான்கு சாஸ்திரங்கள் காணப்படுகின்றன. இதனுள் முதன் நூலாகச் சொல்லப்படுவது சிவஞானபோதம் ஆகும். இதன் ஆசிரியர் மெய்கண்டதேவர் ஆவார். சிவஞானபோதம் என்ற சொல்லின் பொருளை நோக்கும் போது,

சிவம் – மெய்ப்பொருள்

ஞானம் – ஐயம் திரிபின்றி அறிதல், திருவருள்

போதம் – உபதேசித்தல், அனுபவம்

அதாவது சிவம்பந்தமுடைய மெய்ப்பொருளை ஐயம் திரிபின்றி அறிந்து உபதேசிக்கும் நூல் என டாக்டர் ஆ. ஆனந்ததாசன் விளக்கம் அளித்துள்ளார்.

வடமொழி ரௌரவ ஆகமத்தின் 72ம் படலமான பாவவிமோசன படலத்தின் 12ம் சூத்திரத்தின் மொழிபெயர்ப்பு எனப் பொதுவாக எடுத்தாள்வார்கள். சிவஞானமுனிவர், தாஸ்குப்தா போன்றோர் வடமொழிப் பாரம்பரியத்தில் எடுத்துரைக்க கா. சுப்பிரமணியம்பிள்ளை, மறைமலையடிகள் போன்றோர் இதனை நிராகரித்து தமிழர் தத்துவநூலாக இதனைக் கூறுகிறார்கள்.

இன்றும் சிலர் வடமொழித் தழுவலாகவே சிவஞானபோதக் கருத்துக்களைக் கூறினாலும் சைவசித்தாந்த செல்நெறியில் சிவஞானபோதம் ஒரு கொடுமுடியாகத் திகழ்கிறது.

இந்நூல் 12 சூத்திரம், 43 வரி, 39 அதிகரணம், 82 வெண்பா, 211 சொல், 624 எழுத்துக்கள் என்பனவற்றைக் கொண்டது ஆகும். இது,

1. பொது அதிகாரம்
2. சிறப்பதிகாரம்

என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. பொது அதிகாரம் பிரமாணஇயல், இலக்கண இயல் என்பனவற்றையும் சிறப்பதிகாரம் சாதனஇயல், பயனியல் என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இந்நூலின் பெருமையினை நோக்கும் போது,

"வேதம் பசு அதன் பால்மெய் ஆகமம் நால்வர்
ஓதும் தமிழ தனில் உள்ளுறுநெய் – போதமிகும்
நெய்யினுறு சுவையால் நீள் வெண்ணெய் மெய்கண்டான்
செய்தமிழ் நூலின் திறம்"

என்று பண்டார மும்மணிக்கோவையில் குறிப்பிடுகின்றது. இதனை மெய்கண்ட சாஸ்திரநூல்களில் வழிநூலை அருளிய அருணந்தி சிவாசாரியாரும்

"தெரிந்த குரு முதல்வர் உயர்சிவஞான
போதம் செப்பினார்"

என்று தன் குருவின் புகழ்பாடுகின்றார்.

இந்நூலின் ஊடாகப் பல்வேறு விடயங்களை முப்பொருள் என்னும் கருப்பொருளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். அந்த வரிசையில் "**இறைபணி நிற்க**" என்ற கருப்பொருளினை அதிநுணுக்கமாக வெளிப்படுத்தியிருப்பதனைக் காணலாம்.

அதாவது சாதன இயலில் ஆன்மா இறைவனை அடைய, உணர சாதிக்கும் பொருளின் இயல்பினை சாதக உரிமை ஏழாம் சூத்திரத்திலும் சாதித்துப் பெறப்படும் பொருளினியல்பு (சாதகன் இயல்பு) எட்டாம் சூத்திரத்தில் சாதிக்கும் வழி அல்லது முறை (சாதக முறை) ஒன்பதாம் சூத்திரம் சுட்டி நிற்பதைக் காணலாம். ஆனால் இந்நூலின் இறுதிப் பயனியலில் சாதிக்கும் சாதனமாகிய பாசநீக்கம் ஆகிய பயனைக் கூறும்போது பெத்த நீக்கம் என்பர். "**பாசக்ஷயம்**" என்றும் சொல்லப் படுகிறது. இதுவே சிவயோகம் எனப்படுகிற ஞானத்தில் யோகமாகி "**தெளிதல்**" எனப்படுகிறது. சிவோகம் பாவனை செய்யும் உயிர்க்கு அப்பாவனைக் காலத்துச் சிவம் விளங்குமென்றோம். இதனை,

"நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் – அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானோ
வானே முதல்களையின் வந்து"

(சி. போதம் 9 சூ – 3 வெண்பா)

எடுத்து விளக்குமாற்றைக் காணலாம்.

பெத்தநிலையில் உயிர்உலகை அறிந்து நுகர்ந்து வரும்போது இறைவன் அதற்கு உடனாகி நின்று அறிவித்தும், செலுத்தியும் வருவான். தான் வெளிப்படாமல் எதையும் தானே அறிந்து வரித்ததாக ஆன்மா எண்ணும் வகையில் அதனோடு ஒன்றித்து நிற்பான். இதனால் இறைவன்

உணர்த்தியதை ஆன்மாதானே உணர்ந்ததாக ஆன்மா எண்ணும். ஆனால் இப்பாவனை முற்றிய உயிர் அவ்வளவில் போதாது இப்பாவனையில் நின்று நீங்கி அதன்கண் விளங்கிய சிவத்தினைத் தனக்கு வேறு காணாதிருத்தற்கான உபாயத்தைச் செய்தலும் வேண்டும். உயிர் கருவி கரணங்களோடு கூடி அறியும் காலத்துச் சிவம் அவ்வுயிரினை இயக்கி நிற்குமென்றோம். இதனை சிவஞானபோத ஐந்தாம் சூத்திர மூன்றாம் வெண்பா காட்டிய போதிலும், அச்சிவமேயாய் நிற்றல் வேண்டும். அதாவது சிவோகம் பாவனையில் விளங்கிய சிவம் ஒன்றினையே சிந்தித்து வேறொன்றையும் சிந்தியாதிருத்தல் வேண்டும். இக்கருத்தினை பத்தாம் சூத்திரத்தின் வரிகள் உணர்த்துகிறது.

"அவனே தானேயாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க"

என்று உணர்த்தும். அதாவது சிவஞான உருவம் விளங்கப் பெற்ற உயிர் அச்சிவத்தோடு ஒன்றித்து நிற்றல் வேண்டும். இவ் ஏகனாகிய ஒற்றுமை நிலையினை எடுத்துக்காட்ட சிவஞானமுனிவர் பதின்னான்கு முறைகளைக் கூறியுள்ளார். அவற்றுள் சில வருமாறு,

1. குடம் உடைந்தபோது குட ஆகாயமும் வெளியில் உள்ள பேராகாயமும் ஒன்றாகிப் போவது போல.
2. மழுங்கிய வெளிச்சத்தில் சிப்பியைப் பார்த்தவன் வெள்ளியெனத் திரிபுபடக் காண்கிறான். இங்கு வெள்ளி சிப்பியில் ஒன்றாகித் தோன்றுதல் போல்.
3. வெள்ளைத் தாமரைப் பூவில் வெள்ளை நிறமும் தாமரை மலரும் ஒற்றுமைப்பட்டுள்ளது.
4. பாலில் நீரைக் கலந்தாற் போல் நீரைப் பிரிக்க இயலாதது போல்.
5. பழுக்கக் காய்ச்சிய கம்பியில் தெளிக்கப்பட்ட நீர் அதனோடு பிரிக்க முடியாது ஒற்றுமைப்படுதல் போல்.

இவ்வாறு பலருடைய விடயங்களுக்கு தெளிவுபடுத்துவதாக அமைகிறது.

மேலும் சிவஞான உருவம் விளக்கம் பெற்ற உயிர் சிவப்பணியில் வழுவாது நிற்றலும் வேண்டும். அத்தகு நிலையினை சிவஞானபோத பத்தாம் சூத்திரத்தின் முதலாவது வெண்பா உணர்த்துகிறது.

"நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் உண்டாதல்
தான் என ஒன்று இன்றியே தான் அதுவாய் – நான் எனவொன்று
இல்லென்று தானே எனும் அவரைத் தன்னடி வைத்து
இல்லென்று தான் ஆம் இறை"

இந்நிலையில் ஆன்மா செருக்கு என்னும் மலவாசனை நீங்கப் பெற்று இறைவனோடு ஒன்றித்து இருக்கின்ற உடலோடு கூடிய நிலையில் செயற்படுகின்றது.

**"யான் எனது என்னும் செருக்கறுப்பான்....."** என்ற திருக்குறள் வாசகத்தின் ஊடாக நோக்கும்போது இறைவன் தனது திருவடி வியாபகத்துள் அடக்கி நிற்குமாறு செய்து எல்லாப் பொருளும் அவனேயாய் நிற்பான் என்பதே கருத்தாகும். அதாவது,

**"மற்று – நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க்கு**
**அமிழ்தொக்கும் இவன்"** என்னும் நிலையில் நோக்கும் போது பகைவர்களுக்கு நஞ்சை ஒத்தும் நண்பர்களுக்கு அமுதத்தை ஒத்தும் விளங்குபவன் இவன் என்பார்கள்.

இத்துணை நிலையே சிவப்பிரகாசத்தில் **"கண் ஒளி விளக்கு அளித்து"** என்ற பாடலில் **"கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும்"** என உமாபதி சிவாசாரியார் கூறுகிறார். கண்ணொளிக்குத் துணையாய் நின்று பொருள்களை விளக்கும் விளக்கின் ஒளி குறைந்தபோது காணும் தன்மை குறையும். ஒளி மிகுதியாயின் கண்ணின் காணும் ஆற்றல் மிகும். அவ்வாறே ஆன்மாவின் அறிவு, உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப்பொருள் ஆகியவற்றோடு கூடும் போது சிற்றறிவாகி நிற்கும். அதுவே திருவருளோடு கூடும் போது பேரறிவாக விளங்கும் என்பதாகும்.

இந்நிலையில் ஆன்மா பரமேஸ்வரனுடன் ஒன்றாகி நிற்க வேண்டும். ஆன்மா தன் செயல் யாவும் அரன்பணியில் செய்தல் வேண்டும். "நான்" என்பதில் இருந்து விடுபட்டு அவ்வாறு ஒன்றில்லை என்பதையும் இறையே எல்லாம் என்றும் அறிந்து அவனுள் அடங்கி நிற்பாரிடமே அவன் பேதமின்றிக் கலந்து நின்று வெளிப்படுவான். இதனையே,

**"தானவன் என்றெண்ணினார்க்கும்"**

என உதாரண வெண்பா அடிகளில் காணலாம்.

ஆன்மா ஐந்தெழுத்தை உச்சரிக்க அதனால் மலவாசனை யேதும் இல்லாத நிலை நீக்கி ஆன்மசுத்தியேற்படும் என்பதை சிவஞானபோத ஒன்பதாம் சூத்திரம் நெறிப்படுத்தியுள்ளது.

**"......... ஒருவத் தண்ணிழலாம் பதிவிதி எண்ணும்**
**அஞ்செழுத்தே"** என்கிறார்.

ஆன்மா உடலாகிய கூட்டினுள் அடைபட்டிருக்கும் வரை பிராரத்துவ ஆகாமிய வினைகள் நீங்காது எனினும் ஆன்மா இறைபணி நிற்பின் அவன் அருள்வழி தன் செயல்யாதொன்றுமில்லை. எல்லாம் அவன் செயல் என்று தொழில்படுவதே உண்மையான இறைபணியாகும்.




கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2010ம் ஆண்டு நடைபெற்ற
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க பொன்விழா மாநாட்டில் பங்குபற்றிய பிரமுகர்கள்



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழா சைவ மகாநாடு 2010ம் ஆண்டு கொழும்பு தமிழ்ச் சங்க
மண்டபத்தில் நடைபெற்ற வேளை இந்து நாகரிகத்துறை வாழ் நாட்பேராசிரியர்
ப. கோபாலகிருஷ்ண ஐயருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.
திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசசுவாமிகள் நல்லை ஆதீன
2வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளும் காணப்படுகின்றனர்.



2010ம் ஆண்டு பொன்விழா சைவமாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து எழுந்தருளிய
திருவாவடுதுறை ஆதீன 23து குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச சுவாமிகளிடம்
கோகுலப்புரலர் கு. கங்கைணேியன், தேர்வுச்செயலர் சைவப்புலவர் க. நித்தியதசீதரன்,
கௌரவ செயலாளர் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் ஆகியோர் ஆசி பெறுகின்றனர்.



2010ம் ஆண்டு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில்
நடைபெற்ற பொன்விழா சைவமாநாட்டிலும் பட்டமளிப்பு விழாவிலும்
சைவப்புலவர்களுக்குப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2010ம் ஆண்டு நடைபெற்ற
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க பொன்விழா மாநாட்டில் திருவாவடுதுறை ஆதீன
23வது குருமகா சந்நிதானமும், நல்லை குருமகா சந்நிதானமும் எழுந்தருளியபோது
சைவப்புலவர் செ. நவநீதகுமார் பாதபூசை நிகழ்த்துகின்றார்.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2010ம் ஆண்டு நடைபெற்ற
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க பொன்விழா மாநாட்டில் அமரர் திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை
அவர்களின் ஞாபகார்த்தமாக திருநீற்றுப்பையினை சைவப்புலவர் கமலநாதன்,
சைவப்புலவர் நித்தியதசீதரன், சைவப்புலவர் கந்தசத்தியதாசன் சபையினர்க்கு வழங்குகின்றனர்.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2010ம் ஆண்டு நடைபெற்ற
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க பொன்விழா மாநாட்டில் வாழ்நாள் பேராசிரியர்
ப. கோபாலகிருஷ்ணஐயர் (இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
அவர்கள் உரையாற்றுகின்றார்.




2011ம் ஆண்டு நடைபெற்ற சைவப்புலவர் 51வது பட்டமளிப்பு விழாவிலும் மகாநாட்டிலும்
விசேட பண்ணிசைக் கச்சேரியை நல்லை ஆதீன ஓதுவார் பண்ணிசைச்செல்வர்
சி. தில்லைமணி பாடுவதையும் அணிசெய் கலைஞர்களையும் காணலாம்.



2010ம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொன்விழா சைவமாநாட்டில் சிறப்புவிருந்தினர் ஆறுதிருமுருகன் மாணவனுக்கு பரிசில் வழங்கிக்கௌரவிக்கின்றார். அருகில் கௌரவ செயலாளர் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் காணப்படுகின்றார்.



2010ம் ஆண்டு யாழ்ப்பாணம் நாவலர் ம. வி. நடைபெற்ற பொன்விழா சைவமாநாட்டில் சிறப்பு விருந்தினர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் மாணவிக்கு விருது வழங்கிக் கௌரவிக்கின்றார். அருகில் சைவப்புலவர் த. குமரன் நிற்கிறார்.



2010ம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொன்விழா சைவமாநாட்டில் பிரதம விருந்தினர் சி. வெற்றிவேலாயுதம் மாணவனுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கின்றார்.



2010ம் ஆண்டு பொன்விழாவிற்கு இந்தியாவில் இருந்து வருகை தந்த திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் ஆசி வழங்குகிறார்கள்.



சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் எழுதிய "சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்" என்ற நூல் 2011ம் ஆண்டு பட்டமளிப்பு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற போது யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் மா. வேதநாதன் வெளியிட்டுவைக்க இந்து மாமன்ற பிரதித்தலைவர் திரு. ச. தவயோகராசா முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வதையும் அருகில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட நூலாசிரியரையும் காணலாம்.



2011ம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 51வது பட்டமளிப்பு விழாவில் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிறப்புச் சொற்பொழிவாளர் பேராசிரியர் நல்லூர் சரவணன் அவர்களுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திருமிகு கதிர்காமநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகிறார். அருகில் தலைவரும் திரு. சி. தவயோகராசாவும் காணப்படுகின்றனர்.



மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரியில் 2012ம் ஆண்டு நடைபெற்ற சைவப்புலவர் பட்டமளிப்பு மாநாட்டில் உபசெயலாளர் சைவப்புலவர் சு. துஷ்யந் உரையாற்றுவதையும் பேராசிரியர் சி. பத்மநாதனுக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவிப்பதையும் காணலாம்.



2012ம் ஆண்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியில் நடைபெற்ற 52வது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றவர்களோடு உபதலைவர் சா. தில்லைநாதன் தலைவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, நல்லை ஆதீனகுரு முதல்வர் பேராசிரியர் சி. பத்மநாதன், உபதேர்வுச் செயலர் இ. கோபாலபிள்ளை பின்புறம் தேர்வுச் செயலர் கலாபூசணம் சு. செல்லத்துரை ஆகியோரைக் காணலாம்.

அந்நிலையினை மணிவாசகர் திருவாசகத்தில் கூறுகிறார். "அவனருளால் அவன்தாள் வணங்கி" என்றும் நாவுக்கரசு சுவாமிகள் கூறுகிறார்.

"தன் கடனடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்பதன் மூலம் பிராரத்துவ ஆகாமிய கன்மங்கள் ஆன்மாவைப் பீடிக்காது வலி கெடும் என்கிறார்.

மாயாகாரியங்களான தனு, கரண, புவன போகங்கள் ஆன்மாவை பசுத்துவப்படுத்தாதோ என்றபோதும் பசுத்துவப்படுத்தாது. ஏனெனில் மாயாகாரியங்கள் சடத்துவமானவை தாமாகத் தொழிற்படா. அதனை இறைவனே பற்று இன்றி ஆன்மாவிற்காகத் தொழிற்படுத்துகின்றார். ஆன்மாக்கள் "அரன்கழல்" சேர்ந்ததும் யாவும் சிவமயமாய் நிற்றலால் மாயாகாரியங்கள் ஆன்மாவிற்கு மயக்கம் தரா என்கிறார்.

"....... ஈசன் எந்தை இணையடி நீழலே" என்று நாவுக்கரசர் கூறுகிறார்.

"...... செல்வர் சிவபுரத்துள்ளார் சிவனடிகீழ்
பல்லோரும் ஏத்த பணிந்து"

என மணிவாசகர் கூறும் நிலையினையும் காணலாம்.

இவ்வாறு மாயை பிராரத்துவ ஆகாமியங்கள் நீங்கின் சஞ்சிதம் என் செய்யும் எனின் குரு, தீட்சை மூலம் அத்துவசோதனை மூலம் அவையும் நீங்கலாகும் என்பர். அதன் விளைவாக அத்துவிதசுத்தி ஏற்படும். அதாவது பெருங்காயப்பானையில் பெருங்காயம் இல்லாத போதும் அதன் வாசனை இருப்பது போல "நான் அவன்" என்னும் சிவோகம் பாவனை செய்வோரிடம் மீள்பிறவி, பாசத்தளை முளைவிடக்கூடும். அந்நிலையில் சிவோகம் பாவனை முறையாய் ஐந்தெழுத்தால் தம்மையே இறைபணியில் நிற்கச் செயல் வேண்டும் என்கிறார். பத்தாம் சூத்திரத்தில்,

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்றே"

எனவே சிவத்தோடு ஏகமாய் நிற்கும் உயிரை ஆணவமலம் தாக்காது. சிவத்தோடு ஏகமாய் நின்று சிவப்பணி இயற்றும் உயிர்க்கு மாயா கன்மங்களும் இல்லை எனக்கூறும் நிலையில் நாயன்மார்களில் நாவுக்கரசர், சம்பந்தர், மணிவாசகர் போன்றோர் வாக்கும் வாழ்வும் இறைபணிநிற்க என்ற வாசகத்திற்குரியவர்கள் என்பதை மெய்கண்டாரின் ஊடாக நோக்கும் வகையில் அமைகின்றது. எனவே சிவத்தை "சீவன் சிவலிங்கம்" என்னும் வாசகத்திற்கு அமைய பணியாற்ற வேண்டும்.

உ
சிவமயம்

# 2011ம் ஆண்டு சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றோர் விபரம்



## சைவப்புலவர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

மட்டக்களப்பு 231/ A வாணி வித்தியாலய ஒழுங்கை, வாழைச்சேனையில் வாழ்ந்து வருகிறார். கலைமாணிப் பட்டத்தோடு கல்வியியல் டிப்ளோமா, முகாமைத்துவ டிப்ளோமா, இந்து தர்மாசிரியர் பட்டங்களைப் பெற்றுள்ளார். மட்/ பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமை புரிந்து வருகின்றார். விமர்சனக் கட்டுரை, நாட்டாரியல் எழுத்தாளர். கோறளைப்பற்று இந்து மகாசபை, வாழைச்சேனை தமிழ் இலக்கிய கலைமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர், சேக்கிழார் அறநெறிப் பாடசாலை தர்மாசிரியராகவும் கிழக்கு மாகாணத்தில் சைவப்புலவர் சங்கத்தின் வளவாளராகவும் தொழிற்பட்டு வருகின்றார்.

## சைவப்புலவர்



## திருமதி. சண்முகவடிவு தில்லைமணி

யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் பிறந்து தில்லை வாசம், வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையில் வாழ்ந்து வருகின்றார். இந்து நாகரிக சிறப்புக் கலைமாணி, கல்வியியல் டிப்ளோமா பட்டங்கள் பெற்றதோடு வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தராதரம் பெற்றுள்ளார். வட்டு இந்துக் கல்லூரியில் இந்துசமயம், இந்துநாகரீகம், தமிழ் ஆகிய பாடங்களைப் கற்பிப்பதோடு பண்ணிசை கற்பித்தல், புராணபடனம் கற்பித்தல் வில்லிசைப் பயிற்றுனர். சைவச்சொற்பொழிவுகள் நிகழ்த்தல் போன்ற பணிகளைச் செய்து வருவதோடு திருக்கோயில் அலங்காரக்கலை, திருமந்திரத்தில் கல்வி பற்றியும் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளார்.

**பொருள் வடிவான அத்துவாக்கள்**

| | |
|---|---|
| பத அத்துவா 81 | வன்ன அத்துவா - 51 |
| புவன அத்துவா 224 | மந்திர அத்துவா - 11 |




## சைவப்புலவர் செல்வி றஜிதா கைலாயநாதன்

யாழ்ப்பாணம் வரத்தலம்பிள்ளையார் கோயிலடி, பன்னாலை தெல்லிப்பழையில் வசித்து வருகின்றார். தேசிய கல்வியியல் டிப்ளோமா இந்து சமய பயிற்சி பெற்றுள்ளார். அறநெறிப் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றுவதோடு சைவ பரிபாலன சபையால் சைவசித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர் பட்டமும் பெற்றுள்ளார்.



## சைவப்புலவர் டிஹாசி நேமிநாதன்

மட்டக்களப்பு, கண்ணகிபுரம், வாழைச்சேனையில் வாழ்ந்து வருகிறார். ந. நேமிநாதன் கிருபைமணி தம்பதிகளின் பிள்ளை தர்மாசிரியர் பட்டத்தைப் பெற்றுள்ளார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கலைமாணி சைவசித்தாந்த பண்டிதர் கற்கை நெறிகளில் கற்றுக் கொண்டிருக்கின்றார். சிறுகதை எழுத்தாளர் வாழைச்சேனை தமிழ், கலை இலக்கிய மன்றம், பாரதி சமூக கலை இலக்கிய மேம்பாட்டுக் கழகம், ஏசியன் சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் உறுப்பினர் வாழைச்சேனை பிரதேச சைவப்புலவர் வகுப்பின் வளவாளராகவும் தொழிற்பட்டு வருகிறார்.



## சைவப்புலவர் செல்லையா நவநீதகுமார்

இளவாலையில் சைவப்புலவர் சங்கத்தின் ஸ்தாபகர் சைவப்புலவர், ஞானசிரோன்மணி, வித்துவான் வ. செல்லையாவின் புத்திரன். 4A, 1ம் ஒழுங்கை, இரத்மலானையில் வசிக்கிறார். தென் இந்தியா திருவாவடுதுறை ஆதீனத்தின் இலங்கைக்குரிய சைவப் பிரசாரகர். இலங்கையின் சைவசித்தாந்த பயிற்சிமையம், பன்னிரு திருமுறை மைய வகுப்புக்களின் இணைப்பாளராகப் பணிபுரிகிறார். திருமுறை ஓதுவார், பௌராணிகர், சைவநீதி, சைவசமய சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். சைவ சொற்பொழிவுகள் நடாத்தல், சைவ சமய தீட்சை பெற ஒழுங்குகள் மேற்கொள்ளல் போன்ற பணிகளைச் செய்து வருகிறார்.

## சைவப்புலவர் சின்னத்தம்பி விசுவாசம்



கேராளிவத்தை ஒழுங்கை, நீர்வேலி மத்தியில் வாழ்ந்து வருகிறார். பூநகரி மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிகிறார். சைவசமய வாழ்வு வாழ பிள்ளைகளை வழிப்படுத்துகின்றார்.

## சைவப்புலவர் ஈஸ்வரகுமார் சோபனா



நெசவுசாலை ஒழுங்கை, அளவெட்டி தெற்கு, அளவெட்டி பாலசிங்கத்தின் புத்திரி. இந்துதர்மாசிரியர், கலைமாணி பட்டங்களைப் பெற்றுள்ளார். அறநெறி வகுப்பு நடாத்துதல், சைவசமய பாடம் கற்பித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறார்.

**சூசனம் என்பதன் பொருள்**

சூசனம் என்பது செய்யுளில் சூட்சுமமாகச் சொல்லப்பட்ட பொருளின் உண்மை ஞானத்தெளிவு என்பது பெறப்படும். இவற்றில் திருத்தொண்டர் புராண சூசனம் என்பது திருத்தொணடர் புராணத்தில் சூட்சுமமாகச் சொல்லப்பட்ட பொருள்களை வெளிக்கொணர்தலை நோக்கமாகக் கொண்டது. இங்கு சூசனம் என்பது வடமொழியில் "சூசி" என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்த சொல்லாகும். சூசி என்பது ஊசி, கூர் போன்ற கருத்துக்களைத் தரும். சூசனம் என்பது பெயர்ச்சொல்லாய் குறித்துக் காட்டுதல், எடுத்து விளக்கி முன்வைத்தல் என்ற பொருள்களைத் தருகிறது. சூசி என்ற சொல் "ஒத்த", "பயிலப்படுகின்ற", "பொருத்தமான" போன்ற பொருட்களில் வருகின்ற வினையடியிலிருந்து பிறந்ததாக மக்டெனல் அகராதி கருதுகிறது.

சூசித என்பது மிகப் பொருத்தமானதென்ற இறந்தகால உடன்பாட்டு செயற்பாட்டு வினைப்பெயரெச்சம் ஆகும். இவற்றுள் சூசி உணர்த்துகின்ற ஊசி எனும் பொருள், ஊசியால் துளைக்கப்பட்ட, குறுகிய, இலேசில் அவிழ்க்கப்படாத, இருள் போன்ற வஸ்துவைக் குறிக்கும். எனவே இதனடியாகப் பிறந்த சூசனம் காட்சிக்குப் புலப்படாத விடயத்தை வெளிவரச் செய்து வாசகர்களுக்குக் காட்டுதல் என்ற பொருளைத் தரும்.


மேலும் சூசி எனப்படுவது பறவையின் கூரிய அலகு எனவும் குறிப்பிடப்படுகிறது. பறவை பூ மொட்டைத் துளைத்து தேனை உறிஞ்சுவது போல சூசனம் எழுதும் அறிஞர் ஒரு நூற்பகுதியின் உள்ளே இருக்கும் ஞானத்தேனை எடுத்துத் தன் குஞ்சு போன்ற சீடருக்குத் தருகின்றார் என்ற உபகருத்தும் இப்பிரயோகத்தில் அடங்கியுள்ளது.

# 2013 இல் பட்டம் பெறும் சைவப்புலவர்கள் அறிமுகம்


1. சைவப்புலவர் செல்வி கிருபாதேவி வீரசிங்கம்
(1947.03.01)
B.A., B.Com, Med, in Ed. Dip.in ACo.
70A பாமன்கடை வீதி, கொழும்பு–06
ஓய்வு நிலை அதிபர் (S.L.P.S-1)
திருவாவடுதுறை ஆதீனச் சித்தாந்தரத்தினம்



2. சைவப்புலவர் இளையதம்பி கோபாலபிள்ளை
(1956.08.05)
B.A.Dip.Ed,SLPS2.II
துவாரகம், பிரதானவீதி தேத்தாதீவு –2
அதிபர்,
மட்/பட் களுதாவளை விவேகானந்த வித்தியாலயம்
இசை, நாடக கூத்துக்கலைஞர்




3. சைவப்புலவர் திரு கிருபன் வெள்ளைச்சாமி
(1940.01.16)
8A அத்தபத்துவீதி தெகிவளை
ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளார்
தமிழ்மணி (1993) கலாபூஷணம்
திருவாவடுதுறை ஆதீனச் சித்தாந்தரத்தினம்
கவிதை, இலக்கியம், வானொலிப்பேச்சாளர்



4. சைவப்புலவர் திரு. முருகுப்பிள்ளை சங்கரலிங்கம்
(1950.07.06)
B.A, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
3ஆம் பிரிவு, மண்டூர்,
புராணபடன வித்தகர்



5. சைவப்புலவர் திரு. பாலன் சுதாகரன்
(1990.11.27)
23, கறப்பளை, முத்துக்கல், பொலநறுவை
இந்துதர்மாசிரியர், ஆசிரியர் பயிலுனர், அன்னை சாரதாதேவி அறநெறிப்பாடசாலை அதிபர்
தேசிய சாதனையாளர் ஜனாதிபதி விருது பெற்றவர்



6. சைவப்புலவர் திரு. தில்லைநாதன் சதானந்தன்
(1976.02.13)
B.Sc, MEd, LLB, PG, Dip in Edu.
15, புதியமுகத்துவாரவீதி, கல்லடி,
மட்டக்களப்பு.
பல்கலைக்கழக விரிவுரையாளர், சட்டத்தரணி




7. சைவப்புலவர் திரு பாலகிருஷ்ணன் திலகானந்தம்
(1985.01.09)
B.A. Dip in Ed
83/2 வலதுகரை, முத்துவிநாயகபுரம், ஒட்டுசுட்டான்
தனியார் கல்வி ஆசிரியர்,
வானொலி அறிவிப்பாளர், பல நூல்களின் ஆசிரியர்



8. சைவப்புலவர் திருமதி பத்மாவதி தங்கராஜா
(1954.03.15)
B.A., M.A, பொது நிர்வாகம், M.A. சங்கீதம்
23/5 மகேஸ்வரி வீதி, கொழும்பு – 06
பிரதி அதிபர் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி
திருவாவடுதுறை ஆதீனச் திருமுறை நெறிச் செல்வர்




9. சைவப்புலவர் Dr. ஸ்ரீ.கார்த்திகைக்குமரன் சரவணமுத்து
(1956.11.16)
ஸ்ரீ சாயி இல்லம் 127/108 ஸ்ரீதர்மராம வீதி,
கொழும்பு – 09
மருத்துவர், உளவளத்துணை ஆலோசகர்
திருவாவடுதுறை ஆதீனச் திருமுறை நெறிச் செல்வர்



# 2013 இல் பட்டம் பெறும்
# இளஞ்சைவப்புலவர் அறிமுகம்

1. இளஞ்சைவப்புலவர்
திரு சாமித்தம்பி பொன்னுத்துரை
(1945.04.04)
B.A.(Hons)
42,3/3 உருத்திராமாவத்தை கொழும்பு - 06
ஓய்வு நிலை முகாமையாளர் - மக்கள் வங்கி
உள்ளகக் கணக்களாளர் - மக்கள் வங்கி
சித்தாந்த இரத்தினப் பயிலுநர், தர்மாசிரியர்



2. இளஞ்சைவப்புலவர்
திருமதி சத்தயவதனி மாணிக்கநடராசா
(1940.08.19)
24, 1/3 மாதங்கவத்தைலேன் கொழும்பு 06
A/L இலண்டன் (சமஸ்கிருதம்)
சித்தாந்தரத்தினம் பயிலுனர்



3. இளஞ்சைவப்புலவர்
செல்வி கதிர்காமத்தம்பி கார்த்தியாயினி
(1987.11.27)
பல்கலைக்கழக மாணவி
17, காளிகோயில், பெரிய ஊறணி,
மட்டக்களப்பு,
நூல்கர்.




4. இளஞ் சைவப்புலவர்
திரு யோகராசா மோகதாசன்
(1989.08.04)
விவசாய வீதி, கொண்டையன்கேணி,
வாழைச்சேனை.
சித்தாந்தரத்தினம் பயிலுநர், சைவவித்தகர்.



5. இளஞ் சைவப்புலவர்
திரு கந்தசாமி தினேஸ்குமார் (1992.08.31)
56 கறப்பளை, முத்துக்கல், பொலநறுவை
தர்மாசிரியர், அற நெறிப்பாடசாலை ஆசிரியர்,
சித்தாந்திரத்தினம் பயிலுநர்.



6. இளஞ் சைவப்புலவர்
செல்வி உதயகுமார் மிலேந்தினி
(1991.8.11)
கண்ணகிபுரம், வாழைச்சேனை,
பல்கலைக்கழக மாணவி.



7. இளஞ் சைவப்புலவர்
செல்வி. குணபாலசிங்கம் ரிஸாந்தினி
(1991.09.11)
கருங்காலிச்சோலை, பேத்தாழை, வாழைச்சேனை.
பல்கலைக்கழக மாணவி.




8. இளஞ் சைவப்புலவர்
செல்வி யோகராணி பாலசுப்பிரமணியசர்மா
(1956.08.04) B.Com.Dip.inEd
765, 5A திருகோணமலை வீதி,
சோமசுந்தரம் றோட், மாத்தளை.
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
தர்மாசிரியர், வீணை, வயலின் பண்ணிசைக்கலைஞர்
"சாமஸ்ரீகலாஜோதி" கௌரவபட்டம் பெற்றவர்
அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாசிரியர்




9. இளஞ் சைவப்புலவர்
செல்வி ஏரம்பமூர்த்தி பிரகலதா (1983.02.17)
29/7 மாதாகோவில் வீதி,
சேற்றுக்குடா, மட்டக்களப்பு.



10. இளஞ் சைவப்புலவர்
திரு. சிவசம்பு விவேகானந்தன்
(1989.10.17)
திருமலை வீதி, வாகரை
பல்கலைக்கழக மாணவன்




11. இளஞ் சைவப்புலவர்
திரு. சுந்தரலிங்கம் அஜந்தராசா (1991.08.31)
வைத்தியசாலை வீதி, கண்ணகிபுரம்,
மகிழூர், களுவாஞ்சிக்குடா.
பல்கலைக்கழக மாணவன்.



12. இளஞ் சைவப்புலவர்
திரு. தருமராசா ஷர்மிதன் (1992.12.18)
பாடசாலை வீதி, கல்மடு, கல்குடா
பல்கலைக்கழக மாணவன்.



13. இளஞ் சைவப்புலவர்
திரு சிவராசா கமல்ராஜ்
காளி கோவில் வீதி, பெரியகல்லாறு 3, கல்லாறு.
பல்கலைக்கழக மாணவன்.



14. இளஞ் சைவப்புலவர்
செல்வி பாலச்சந்திரன் அனுசியா
(1989.03.11)
உதயபுரவீதி, பெரியகல்லாறு 3, கல்லாறு
பல்கலைக்கழக மாணவி.



15. இளஞ் சைவப்புலவர்
திருமதி. பூமணி ரவீந்திரன்
(1968.06.19)
B.A. Dip. in Edu.
492, திருமலை வீதி, பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.
ஆசிரியர்.



# அகில இலங்கை சைவப்புலவர் சங்க நிர்வாக உத்தியோகத்தர்கள்

1. தலைவர் :- சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
2. உப தலைவர்கள் :-
    1. சைவப்புலவர் சா.தில்லைநாதன், மட்டக்களப்பு
    2. சைவப்புலவர் சு. தேவமனோகரன், யாழ்ப்பாணம்.
3. செயலாளர் :- சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன், யாழ்ப்பாணம்.
4. உப செயலாளர் :- சைவப்புலவர் சு.துஸ்யந் மட்டக்களப்பு
5. பொருளாளர் :- சைவப்புலவர் சி.நந்தகுமார்
6. தேர்வு செயலர் :- சைவப்புலவர் சு. செல்லத்துரை கொழும்பு
7. தேர்வு உப செயலர் :- சைவப்புலவர் இ.கோபாலபிள்ளை
8. சைவப்பிரசார அமைச்சர்கள் :-
    1. சைவப்புலவர் க. நித்தியதசீதரன், யாழ்ப்பாணம்.
    2. சைவப்புலவர் சரோஜினிதேவி சிவஞானம், திருகோணமலை

# செயற்குழு உறுப்பினர்கள்

1. சைவப்புலவர் வ. ஆ. தங்கமயில், வடமராட்சி
2. சைவப்புலவர் கு. சுமுகலிங்கம், தென்மராட்சி
3. சைவப்புலவர் ப. ருத்திராதேவி, வலிகாமம் வடக்கு
4. சைவப்புலவர் சி. ரமணராசா, அளவெட்டி
5. சைவப்புலவர் ஞா. ஞானலோகேஸ்வரி, வவுனியா
6. சைவப்பலவர் செ. நவநீதகுமார், கொழும்பு
7. சைவப்புலவர் கவிதா கதிரமலை, வலிகாமம் கிழக்கு
8. சைவப்புலவர் ஸோபா ஜெயரஞ்சித், மட்டக்களப்பு
9. சைவப்புலவர் த. குமரன், வலிகாமம் மேற்கு
10. சைவப்புலவர் ந. திருக்குமரன், கிளிநொச்சி
11. சைவப்புலவர் சிவானந்தஜோதி ஞானசூரியம், மட்டக்களப்பு
12. சைவப்பலவர் பொ. சந்திரவேல், வலிகாமம் மேற்கு
13. சைவப்புலவர் ம. சிவலிங்கம், யாழ்ப்பாணம்.

உ
ஓம் நமசிவாய

# மனிதப் பிறப்பின் மகத்துவம் அறிவோம்

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
அச்சுவேலி.

சைவப்புலவர்
சி. நந்தகுமார்,
பொருளாளர்.

முட்டை, வித்து, கருப்பை என எண்ணப்படும் வகையால் எழுவகைப் பிறப்புக்களில் 84 நூறாயிரம் ஜோனிபேதப் பிறப்புக்கள் உள்ளன. அவற்றுள் பலவாகப் பிறந்திருந்து உழலும் பிறப்பு வகைகளை ஒழித்து மானுடப் பிறவியில் பிறத்தல் பெருங்கடலைக் கை, கால்களால் நீந்திக் கரையேறியவன் செயல்போலுமல்லவா?

மக்களாய் பிறந்தும் உயிர்க்கு உறுதி பயக்கும் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் ஆகிய நால்வேதம், காரணம், காமிகம் முதலிய 28 சைவாகமங்கள் முதலிய நூல்களைப் பயிலாத நாடுகளில் பிறவாமல் மாதவம் புரிதற்கேற்ற இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பிறத்தல் தவப் பயனாகும். அங்ஙனம் பிறப்பினும் தவஞ் செய்யும் குடிகளில் பிறத்தல் மேலும் அரிதாகும். அவ்வாறு பிறந்த பின்னும் சைவசமயம் சார்ந்து நிற்றலும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக் கொண்டு திருநீறு, உருத்திராக்கத்தை தரித்து சிவசிந்தனையுடன் வாழும் வாழ்க்கை அரிதாகும்.

இவ்வாறு நற்குடியில் பிறந்து புறச்சமயநெறி போகாது சைவசமயியாக வாழ்ந்தாலும் செல்வப்பெருக்காலாய மயக்கத்தை ஒழித்தும் வறுமையாலாய சிறுமையிலிருந்து நீங்கியும் சிவபெருமான் அடியார்களாக அடிமைத்திறம் பூண்டு சைவசித்தாந்த செந்நெறியில் வாழும் புண்ணியப் பேறு பெறுதல் மிகவும் அரிதாகும். இத்தகைய நற்குணநலன்களுடன் மேலான திருவருளால் இளம் பிறையை அணிந்த சிவபெருமானைத் தினம் தினம் வழிபடுவோர்கள் உயர்ந்த புண்ணிய ஆன்மாக்கள் ஆவர்கள். மேலும் வாழ்வில் இருள் நீங்கி இன்புற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ்ந்து செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏற்றிப் பணிய இன்பமாய் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்"

**வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி**
**தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்**
**ஊழ் பெறல் அரிதுசால உயர் சிவஞானத்தாலே**
**போழ் இளமதி யினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே**

*சிவஞானசித்தியார் 181*



# பசுக்களைப் பாதுகாப்போம் பயன் பல பெறுவோம்

கோகுலப்புரவலர் கு. கங்கைவேணியன்

"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"
— திருமந்திரம்

"தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் ஆழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ நம் ஆவினங்கள்"


சிவலோகத்தில் சிவனது சந்நிதியில் இடபம் இருக்கிறது. அதன் பக்கத்தில் நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவனைப் பசுக்கள் இருக்கும். இவை கபில நிறம், கருநிறம், வெண்ணிறம், புகைநிறம், செந்நிறம் உடையனவாகும். இப்பசுக்கள் சிவனது திருவருளினாலே திருப்பாற்கடலிலிருந்து சிவ பூசைக்காகவும் யாகக் கிரியைகளுமாகவும் பூமியில் பிறந்தன.

இப்பசுக்களின் உடலில் பிள்ளையார், முருகன், சிவன், உமை, விஷ்ணு, மகாலட்சுமி, சரஸ்வதி, வீரபத்திரர் என எல்லாத் தெய்வங்களும் இந்திரன் முதலியதேவர்களும் விரும்பி உறைகின்றனர். இத்தகு பசுக்களைக் கொன்றால் மகாகொடிய பாவம் கிடைக்கும்.

நமக்கு பால்தரும் பசுவைக் கொல்லலாமா? நம் எல்லோருக்கும் பால் தந்து கொண்டிருக்கும் கோமாதாவாகிய பசுக்களை வருத்துவதும் கொல்வதும் கொன்று இறைச்சி புசிப்பதும் மகாகொடிய பாவமாகும். கொல்பவன் ஏழேம் பிறப்பினும் துன்பத்தை அனுபவிப்பான். இறுதியில் நரகத்தில் வீழ்ந்து அழிவான்.

"பொன்றாது திருமணங்கொள் புனைபூங் கொன்றை புனைந்தார்
ஒன்றா வெள்ளேறு உயர்த்ததுடையார் அதுவே ஊர்வார்
கன்று ஆவினஞ் சூழ் புறவிற் கடவூர் மயானம் அமர்ந்தார்.
பின்றாழ் சடையார் ஒருவர் அவர் எம் பெருமான் அடிகளே"
— சம்பந்தர்

# முப்பதியாறு மாயா தத்துவங்கள்



## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டி முடிவுகள்

**வில்லிசை**

1ம் இடம் யா/ வட்டு இந்துக்கல்லூரி சித்தன்கேணி
2ம் இடம் யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்

**புராணபடனம்**

1ம் இடம் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
2ம் இடம் யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
3ம் இடம் யா/ யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி

**சைவசமய அறிவுப்போட்டி**

1ம் இடம் செல்வி நித்தியமலர் முருகையா
கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி
2ம் இடம் செல்வி நிருஷாங்கனி சிவனேஸ்வரன்
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
3ம் இடம் செல்வி விஷாலினி செல்வகுமார்
கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி
செல்வி ஜெனுசியா ஜெகதீஸ்வரன்
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

போட்டி நடைபெற்ற இடம் வண்ணார்பண்ணை நாவலர் ம.வி. இவர்களுக்குரிய பரிசில்கள் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில் 19.10.13ல் வழங்கப்பட்டது.

## கொழும்பில் நடைபெற்ற போட்டி முடிவுகள்

**வில்லிசை**

1ம் இடம் கொழும்பு இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04
2ம் இடம் சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு - 06
3ம் இடம் றோயல் கல்லூரி, கொழும்பு - 07

**புராணபடனம்**

1ம் இடம் கொழும்பு இந்துக்கல்லூரி, முகத்துவாரம்.
2ம் இடம் சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு - 06
3ம் இடம் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி - கொழும்பு - 04

**சைவசமய அறிவுப்போட்டி**

| | |
|---|---|
| 1ம் இடம் | செல்வி. புஸ்பிகா செல்வரட்ணம்<br>சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு - 06 |
| 2ம் இடம் | செல்வி சரவணநந்தினி பாலகிருஷ்ணன்<br>கொழும்பு இந்துக்கல்லூரி, முகத்துவாரம். |
| 3ம் இடம் | செல்வி. புஸ்பாஞ்சலி அரிச்சந்திரன்<br>இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி - கொழும்பு - 04 |

இவர்களுக்குரிய பரிசில்கள் 12.10.2013 போட்டி நடைபெற்று முடிந்த வேளையில் கொழும்பு இந்துக்கல்லூரியில் வழங்கப்பட்டது.

## மட்டக்களப்பில் நடைபெற்ற போட்டி முடிவுகள்

**புராணபடனம்**

| | |
|---|---|
| 1ம் இடம் | மட்/ பட்/ களுதாவளை மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | மட்/ பட்/ உதயபுரம் தமிழ் வித்தியாலயம் |

**சைவசமய அறிவுப்போட்டி**

| | |
|---|---|
| 1ம் இடம் | மட்/ பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | மட்/ பட்/ குறுமன்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் |
| 3ம் இடம் | மட்/ பட்/ மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் |

இவர்களுக்குரிய பரிசில்கள் 12.10.2013 போட்டி நடைபெற்று முடிந்த வேளையில் மட்டக்களப்பு மகிழூர் சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் வழங்கப்பட்டது.

| பிரகாரங்கள் | உடம்பு வகைகள் |
|---|---|
| ஒன்று | மனிதனுடைய உடம்புத் தொகுதி |
| மூன்று | ஸ்தூல, சூட்சும, காரண உடம்புகள் |
| ஐந்து | அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் |
| ஏழு | அன்ன உடம்பு, பிராண உடம்பு, இச்சை உடம்பு, உருவமான உடம்பு, அருவமான உடம்பு, விஞ்ஞான உடம்பு, ஆனந்த உடம்பு. |

முதுகுத்தண்டு - கொடிமரம்

தருப்பைக் கயிறு - பிராணவாயு

வெள்ளைத் துணி - சுழுமுனை

மேலே ஏறுவது - தலையின் உச்சியில் சகஸ்ரார கமலத்தைக் குறிப்பிடுகின்றது.

# சைவப்புலவர் பட்டமளிப்பு விழா, சைவமாநாடு என்பவற்றுக்கு நிதி உதவியோர் விபரம்

| | |
|---|---|
| திரு. இ. ச.பே. நாகரத்தினம் - கஜமுகன் ஹாட்வெயர் | 25000.00 |
| திரு. சி. வெற்றி வேலாயுதம் - வலம்புரிப் பத்திரிகை | 20000.00 |
| திரு. கு. கங்கைவேணியன் - வேணி களஞ்சியம் | 10000.00 |
| திரு. க. கு. க சிவபாலன் க.கு. கந்தையாபிள்ளை அன்சன்ஸ் | 5000.00 |
| திரு. இ. ஜெயவீரசிங்கம் - கற்பக விநாயகர் கலாசார மண்டபம் | 5000.00 |
| திரு. ம. விக்னேஸ்வரன் - வளர்மதி ரெக்ஸ் ரைல்ஸ் | 4000.00 |
| சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை - கொக்குவில் | 1000.00 |
| சைவப்புலவர். சு. செல்லத்துரை - கொழும்பு | 1000.00 |
| சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் - புத்தூர் | 1000.00 |
| சைவப்புலவர் க. நித்தியதசீதரன் - பன்னாலை | 1000.00 |
| சைவப்புலவர் சி. நந்தகுமார் - உரும்பிராய் | 1000.00 |
| சைவப்புலவர் சி. விசுவாசம் - நீர்வேலி | 1000.00 |
| சைவப்புலவர் தயாநிதி யோகராஜன் - நீர்வேலி | 1000.00 |
| சைவப்புலவர் ருத்திராதேவி பகீரதன் - தெல்லிப்பழை | 1000.00 |
| சைவப்புலவர் சு. தேவமனோகரன் - இணுவில் | 1000.00 |
| சைவப்புலவர் ஸோபா ஜெயரஞ்சித் - வாழைச்சேனை | 1000.00 |
| சைவப்புலவர் டிஹாசி நேமிநாதன் - வாழைச்சேனை | 1000.00 |
| சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி - வட்டுக்கோட்டை | 1000.00 |
| சைவப்புலவர் றஜிதா கைலாயநாதன் பன்னாலை | 1000.00 |
| சைவப்புலவர் ஜெயந்தி கமலேஸ்வரன் - கொக்குவில் | 1000.00 |
| சைவப்புலவர் கவிதா கதிரமலை - கோண்டாவில் | 1000.00 |
| சைவப்புலவர் ம. சிவலிங்கம் - கோண்டாவில் | 1000.00 |
| சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம் - மானிப்பாய் | 1000.00 |
| சைவப்புலவர் சு. துஷ்யந் - பெரியகல்லாறு | 1000.00 |
| சைவப்புலவர் இ. கோபாலபிள்ளை - தோற்றாத்தீவு | 1000.00 |
| சைவப்புலவர் ந. புகன் ஸ்ரீந்திரன் - கோண்டாவில் | 1000.00 |
| சைவப்புலவர் ச. முகுந்தன் - இணுவில் | 1000.00 |
| சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் - சண்டிலிப்பாய் | 1000.00 |
| சைவப்புலவர் ஈ. சோபனா - அளவெட்டி | 1000.00 |
| சைவப்புலவர் த. குமரன் - மல்லாகம் | 1000.00 |

(17.10.2013 வரை நிதியுதவி செய்த சைவப்புலவர்களின் விபரம் இங்கு தரப்பட்டுள்ளது)

# விழா நிகழ்ச்சி நிரல்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்தும்

## சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்

### காலம்

விஜய வருடம் ஐப்பசி மாதம் இரண்டாம் நாள்

சனிக்கிழமை

2013.10.19

காலை 8.30 மணி – பி.ப. 2.30 மணி

### இடம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன

கலா மண்டபம்

### தலைமை

சைவப்புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை

(சங்கத்தலைவர்)

சைவசமய அன்பர்கள் யாவரையும்

அன்புடன் அழைக்கின்றோம்.

153, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
06.10.2013



விழாக்குழுவினர்
அ.இ.சை.பு.சங்கம்.

### திருமுன்னிலை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன

குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக

ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்

### முதன்மை விருந்தினர்

பேராசிரியர் திருமிகு. மா. வேதநாதன் அவர்கள்

தலைவர் – இந்துநாகரிகத்துறை

இணைப்பாளர் - சைவசித்தாந்த முதுமாணிக்

கற்கைநெறி. யாழ். பல்கலைக்கழகம்

### கௌரவ விருந்தினர்

திருமிகு. சி. வெற்றி வேலாயுதம் அவர்கள்

(வலம்புரிப் பத்திரிகை நிறுவனம்)

திருமிகு. இ. ச. பே. நாகரத்தினம் அவர்கள்

(இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்)

### சிறப்பு விருந்தினர்

திருமிகு. கு. கங்கைவேணியன் அவர்கள்

திருமிகு. க. கு. க. சிவபாலன் அவர்கள்

திருமிகு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள்

# நிகழ்ச்சி நிரல்

காலை 8.30 மணி

1. நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிபாடு.
2. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நாவலர் பெருமானின் உருவச்சிலைக்கு மலர்மாலை சூட்டிப் போற்றி வணங்கல்.
3. மணிமண்டபத்திலிருந்து ஊர்வலமாக விழா நடைபெறும் ஆதீன கலா மண்டபம் அடைதல்.

## அமர்வு – I

காலை 9.00 மணி

1. மங்கல விளக்கேற்றல்.
2. நந்திக்கொடி ஏற்றல்.
   கொடிக்கவி பாடல் – சைவப்புலவர் ச. தில்லைமணி
3. பஞ்சபுராணம் ஓதல்.
   சங்கீதவித்தகர் திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன் திருவாவடுதுறை ஆதீன கொழும்பு திருமுறைப் பயிற்சி மைய பயிற்சி ஆசிரியர்

காலை 9.20 மணி

வரவேற்புரை – சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன்
(செயலர், அ. இ. சை. பு. சங்கம்)

காலை 9.30 மணி

அருளுரை – நல்லை ஆதீன குருமகாசந்நிதானம்

காலை 9.40 மணி – தலைமையுரை

காலை 9.50 மணி

சிறப்புரை – திருமிகு. சா.விநாயகமூர்த்தி அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில வருகை விரிவுரையாளர்)

காலை 10.30 மணி

"சைவநாதம்" வெளியீடு

வெளியீட்டுரை – சைவப்புலவர் சி.நந்தகுமார் அவர்கள்
(பொருளாளர், அ.இ.சை.பு. சங்கம்)

காலை 10.40 மணி – பிரதமவிருந்தினர் உரை

காலை 11.00 மணி

1. பட்டமளிப்பு :
   2013ம் ஆண்டுத் தேர்வில் சித்திபெற்ற சைவப் புலவர், இளஞ்சைவப்புலவர்கள்.
2. பரிசளிப்பு :
   அ.இ.சை.பு. சங்கத்தினால் பாடசாலை மாணவரிடையே நடத்திய
   1. சைவசமய வினாவிடைப்போட்டி
   2. புராணபடனப்போட்டி
   3. வில்லிசைப்போட்டி

   என்பவற்றில் முதல் மூன்றிடம் பெற்றவர்களுக்கு
3. "சைவப்புரவலர்" கௌரவ பட்டம் வழங்கிக் கௌரவித்தல்.

## அமர்வு – II

தலைமை : சைவப்புலவர் சா. தில்லைநாதன்
(உபதலைவர், அ.இ.சை.பு. சங்கம்)

காலை 11.30 மணி

போட்டியில் 1ம் இடம் பெற்ற மாணவர் நிகழ்ச்சிகள்
1. வில்லிசை
2. புராணபடனம்

பி.ப 12.30 மணி

வில்லிசை "மெய்கண்டார்"
கலாபூஷணம் சைவப்புலவர் இராசையா சிறீதரன் குழுவினர்

## அமர்வு – III

தலைவர் : சைவப்புலவர் சு. தேவமனோகரன்
(உபதலைவர், அ.இ.சை.பு. சங்கம்)

பி.ப. 1.30 மணி
"சைவநீதி" சஞ்சிகை வெளியீடு
வெளியீட்டுரை – சிவத்தமிழ்வித்தகர்
சிவ மகாலிங்கம் அவர்கள் M.A.
(ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர்,
இந்துசமய கலாசாரத் திணைக்களம்)

ஏற்புரை – சைவப்புவர் செல்லையா நவநீதகுமார்
"சைவநீதி" ஆசிரியர்

பி.ப 2.00 மணி
நன்றியுரை – சைவப்புலவர் க. நித்தியதசீதரன்
(பிரசாரச் செயலர், அ.இ.சை.பு.சங்கம்)

பி.ப 2.15 மணி – திருமுறை ஓதல்
சைவப்புலவர் கவிதா கதிரமலை

மு.கு : பி.ப. 4.00 மணிக்கு மண்டபத்தில்
நடைபெறும் கலந்துரையாடலுக்கு
அனைத்து சைவப்புலவர்கள்,
இளஞ்சைவப்புலவர்கள் அனைவரையும்
கலந்து கொள்ளுமாறு
வேண்டுகின்றோம்.

தலைவர். செயலாளர்.


நாமன் பிறின்டேர்ஸ், ஆனைக்கோட்டை. T.P. 021 225 5566

## 2013ல் பட்டம் பெறுவோர்
### சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்

1. செல்வி. கிருபாதேவி வீரசிங்கம் – கொழும்பு 06.
2. திரு. இளையதம்பி கோபாலபிள்ளை – தேத்தாத்தீவு 02.
3. திரு. கிருபன் வெள்ளைச்சாமி – தெகிவளை.
4. திரு. முருகுப்பிள்ளை சங்கரலிங்கம் – மண்டூர்.
5. திரு. பாலன் சுதாகரன் – பொலநறுவை.
6. திரு. தில்லைநாதன் சதானந்தன் – மட்டக்களப்பு.
7. திரு. பாலகிருஷ்ணன் திலகானந்தம் – ஒட்டிசுட்டான்.
8. திருமதி. பத்மாவதி தங்கராஜா – கொழும்பு 06.
9. திரு. சிறீசோமாஸ்கந்தர் காத்திகைக்குமரன் சரவணமுத்து – கொழும்பு 09.

### இளஞ்சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்

1. திரு. சாமித்தம்பி பொன்னுத்துரை – கொழும்பு 06.
2. திருமதி. சத்தியவதனி மாணிக்கநடராஜா – கொழும்பு 06.
3. செல்வி. கதிர்காமத்தம்பி கார்த்தியாயினி – பெரிய ஊறணி, மட்டக்களப்பு.
4. திரு. யோகராசா மோகதாசன் – வாழைச்சேனை.
5. திரு. கந்தசாமி தினேஸ்குமார் – பொலநறுவை.
6. செல்வி. உதயகுமார் மிலேந்தினி – வாழைச்சேனை.
7. செல்வி. குணபாலசிங்கம் ரிஸாந்தினி – வாழைச்சேனை.
8. செல்வி. யோகராணி பாலசுப்பிரமணியசர்மா – மாத்தளை.
9. செல்வி. ஏரம்பமூர்த்தி பிரகலதா – செந்றுக்குடா, மட்டக்களப்பு.
10. திருமதி. பூமணி ரவீந்திரன் – பெரிய ஊறணி, மட்டக்களப்பு.
11. திரு. சுந்தரலிங்கம் அஜந்தராசா – கனுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
12. திரு. தருமராசா ஷர்மிதன் – கல்குடா.
13. திரு. சிவசம்பு விவேகானந்தன் – வாகரை.
14. திரு. சிவராசா கமல்ராஜ் – பெரியகல்லாறு 03.
15. செல்வி. பாலச்சந்திரன் அஜுசியா – பெரியகல்லாறு 03.



உ
சிவமயம்
ஓம் நமசிவாய

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்** யாழ்ப்பாணம்
நடத்தும் 53வது சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்
நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

விஜய வருடம் ஐப்பசி மாதம் இரண்டாம் நாள் சனிக்கிழமை
கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர், கல்விக் காருண்யன்,
மனிதநேய ஈகையாளன், பொன்மலர்ச் செம்மல்

## திருமிகு. லயன் இ.ச.பே. நாகரத்தினம்

அவர்களின் சைவசமயப் பணிகளையும், கல்விப் பணிகளையும்
பாராட்டி அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

# "சைவப்புரவலர்"

எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.




மனதார வாழ்த்துவோர்

| | | |
|---|---|---|
| மு. திருஞானசம்பந்தப்பிள்ளை | சி. நந்தகுமார் | செ. கந்தசத்தியதாசன் |
| *தலைவர்* | *பொருளாளர்* | *கௌரவ செயலாளர்* |

விழாக்குழுவினர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

**19.10.2013**



உ
சிவமயம்
ஓம் நமசிவாய

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்** யாழ்ப்பாணம்
நடத்தும் 53வது சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்
நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்


விஜய வருடம் ஐப்பசி மாதம் இரண்டாம் நாள் சனிக்கிழமை
நிர்வாக இயக்குனர் வலம்புரிப் பத்திரிகை,
யாழ்ப்பாணம்

**திருமிகு. சிவஞானம் வெற்றிவேலாயுதம்**

அவர்களின் சைவசமயப் பணிகளையும், கல்விப் பணிகளையும்
பாராட்டி அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

# "சைவப்புரவலர்"

எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



மனதார வாழ்த்துவோர்

| | | |
|---|---|---|
| மு. திருஞானசம்பந்தப்பிள்ளை | சி. நந்தகுமார் | செ. கந்தசத்தியதாசன் |
| *தலைவர்* | *பொருளாளர்* | *கௌரவ செயலாளர்* |

விழாக்குழுவினர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

19.10.2013

# எம் மனமார்ந்த நன்றி


அகில இலங்கைச் சைவப்புவலர் சங்கம் 53 ஆண்டுகள் பழமை வாய்ந்த சங்கமாகும். மேலான உண்மைச் சமயமான சைவசமயத்தின் உண்மையை, வரலாற்றை, வழிபாட்டை பரப்புகின்ற சங்கம் சைவப் புலமையாளர்களை உருவாக்கும் சங்கம். சைவவாழ்வியலை வாழ வழிகாட்டும் சங்கம். இத்தகு சங்கத்தை வளர்க்கும் சிந்தைகொண்ட அத்தனை உள்ளங்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள். யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களிடையே புராணபடனப்போட்டி, வில்லிசைப்போட்டி, சைவசமய வினாடி வினாப்போட்டி என்பவற்றை நடத்திய எல்லோருக்கும் எம் நன்றிகள். சைவநாதம் – 3 மலர் வெளியீட்டுக்கு கட்டுரைகள் வழங்கியவர்கள், விளம்பர அனுசரணை செய்தோர்கள், நூலுக்கான விளம்பரங்களைப் பெற்றவர்கள், மலருக்கான வேலைகளைச் செய்தவர்கள், அழகாக அச்சிட்டு உதவியவர்கள் எல்லோருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

சைவப்புவலர் பட்டமளிப்பு விழாவுக்கும், சைவ மகாநாட்டிற்கும் மதிய உணவு, காலை, மாலை உணவு, சிற்றுண்டி, தேனீர் போன்றவற்றை வழங்க நிதியுதவி செய்த பெரியோர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

கொழும்பிலிருந்தும் மட்டக்களப்பு, வவுனியாவிலிருந்தும் வருகை தந்தோர் தங்கி நிற்பதற்குரிய இடங்களை வழங்கிய அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஆகியோருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

இவ்விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பேராளர்களுக்கும் ஏனையோருக்கும் மலர் பிரதியியைப் பெற்று உதவியோருக்கும் நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நிதியுதி செய்த சைவப்புலவர்களுக்கும் விழாவில் சரீர உதவிகள் புரிந்த சைவப் புலவர்களுக்கும் எம்மனமார்ந்த நன்றிகள்.

பரிசில் வழங்குவதற்கு நூல்கள் வழங்கி உதவிய அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியோருக்கும் எம்மனமார்ந்த நன்றிகள்.



செ. கந்தசத்தியதாசன்
கௌரவ செயலாளர்.

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க சைவநாதம் வாழ்க

# சக்திவேல் ஹாட்வெயர்

மல்ரிலாக் கலர் வங்கி

கட்டடத்தேவைக்கான அனைத்துப் பொருட்கள், பெயின்ற் வகைகள்,
மாபிள் வகைகள், மின்சாரப் பொருட்கள் என எல்லாவற்றையும்
ஒரே கூரையில் மலிவாகப் பெற்றுக் கொள்ள

# Sakthivel Hard Wheyer

*K.K.S. Road, Kondavil West, Kondavil (Inuvil)*
*Tel : 021 4921213, 021 4921215, 021 4921214*

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க
சைவநாதம் வாழ்க



# சிவசம்பு

## களஞ்சியம்

அபிஷேகத் திரவிய விற்பனையாளர்

இல.3, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

No.3, Power House Road,
Jaffna.

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க
சைவநாதம் வாழ்க

# கிருஷ்ணா

## ஸ்ரோர்ஸ்

பலசரக்குப் பொருட்கள்,
வீட்டுக்குத் தேவையான
தானிய வகைகள் விற்பனையாளர்



உரிமையாளர் :
க. தவக்குமார்.


மூளாய் வீதி,
சங்கானை.

With best compliments form :

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க சைவநாதம் வாழ்க

# பரம்ஸ் சைவ உணவகம்

தரமான சைவச்சாப்பாடு,
சிற்றுண்டி வகைகளைச் சுவையாகவும்,
மலிவாகவும் பெற்றிட......




பிரதான வீதி,
சங்கானை.

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க
சைவநாதம் வாழ்க

# உதயன் இரும்பகம்



பிரதான வீதி,
சங்கானை.

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க
சைவநாதம் வாழ்க

# தரன் பந்தல் சேவை

திருமண வைபவங்கள்,
பூப்புனித நீராட்டு வைபவங்கள்,
ஆலய விழாக்கள் அனைத்திற்கும்
அலங்கார வேலைகளைச்
சிறப்புறச் செய்து தருபவர்கள்.



உரிமையாளர் :
நி. ரதிதரன் (ரவி)

பன்னாலை,
தெல்லிப்பளை.
(சங்குவேலி)


சிவகணேசன்
ரெக்ஸ் ஸ்ரைல்ஸ்
யாழ் நகரில் மக்கள் போற்றும்
மகத்தான ஜவுளிகளின் மனம் கவர்
மாளிகை
SIVAKANESAN TEXTILES
Wholesale & Retail Dealers in Textiles
Specialist in Wedding Sarees
41, Grand Bazaar,
Jaffna.
Tel : 021 222 2063



Lingam Cool Bar
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சிவன் கோயில் தெற்குப் பக்கம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
றூபன் பிறிண்டேர்ஸ் . ஆனைக்கோட்டைச் சந்தி. T.P - 021 225 5566